Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2483)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை (28.04.2013) பக்கங்கள் 20 ஓசை - 210




03



07



12



18



17

## கொமன்வெல்த் மாநாடு அதிர்ச்சியடையும் கனடா

(லண்டன்)

கொமன்வெல்த் அமைப்பிலுள்ள நாடுகளுடைய தலைவர்கள் பங்கேற்கும் பொது நலவாய மாநாடு இவ்வாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் நடப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் தருகின்ற ஒரு முடிவு என கனடாவின் வெளியுறவு அமைச்சர் ஜான் பேர்ட் தெரிவித்துள்ளார்.

கொமன்வெல்த் அமைப்பு என்பது 19 ஆம் பக்கம் பார்க்க


## பொதுநலவாய மாநாட்டில் அவுஸ்ரேலியா பங்கேற்கும்

(சிட்னி)

மனித உரிமை குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இலங்கை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதில்லை என அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டைப் புறக்கணிக்குமாறு முன்னாள் அவுஸ்ரேலியப் 19 ஆம் பக்கம் பார்க்க

# படையினர் வசம் காணிகள் இணக்கப்பாடு இல்லை




(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பகுதிகளில் படைத்தரப்பினரிடம் மக்களின் காணிகள் உள்ளமை தொடர்பில் தமக்கு இணக்கப்பாடு இல்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் யாழ். மாவட்ட பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தின் வலி.கிழக்கு மற்றும் வலி.வடக்குப் பகுதிகளில் படையினரிடம் மக்களின் காணிகள் உள்ள நிலை தொடர்பாக எமக்கு எவ்வித இணக்கப்பாடும் இல்லை. இது தொடர்பாக எமது அதிருப்தியையும் தெரிவித்துக்கொள் கினறோம். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு உண்மை நிலைமையை விரிவாகத் தெளிவுபடுத்தவுள்ளோம்.

முன்னர் எந்த நேரத்தில் என்னவும் நடக்கலாம் என அச்சநிலை இருந்து வந்த போதிலும் தற்போது ஒரு அமைதிச் சூழல் உருவாகியுள்ள இன்றைய 19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் சரித்திரத்தை மாற்றி எழுதுவதற்கு முயற்சி

### என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களின் சரித்திரத்தை மாற்றி எழுதுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 36ஆவது நினைவுப் பேருரை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

தந்தை செல்வா ஒரு போதும் பயங்கரவாதத்தை ஆதரிக்கவில்லை. அதை பகிரங்கமாக எதிர்த்தார். பேச்சு வார்த்தையின் மூலமாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். 19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண மக்கள் பீதியுடன் வாழ்க்கை

### பி.பி.சி.யிடம் ரணில்

வடமாகாண மக்கள் யுத்த காலத்தைவிடவும் தற்போது தான் பயப் பீதியுடன் வாழ்வதாக அங்கு பயணம் செய்துள்ள நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் பி.பி.சி.யிடம் தெரிவித்துள் 19 ஆம் பக்கம் பார்க்க

## காணி கொள்வனவிற்காக மாணவர்களிடம் பணம் அறவீடு

### தனியார் கல்வி நிலையத்தின் புதிய வருமானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிலையமொன்று தான் நடத்தி வரும் குறித்த தனியார் கல்வி நிலையக் காணியைக் கொள்வனவு செய்வதற்காக அங்கு கற்கும் மாணவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணத்தை மாதாந்தம் அறவிட்டு வருவதாக பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.குடாநாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் அண்மைக்காலமாக மாணவர்களிடம் அறவிடப்படும் கட்டணங்களை அதிகரித்து வருகின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிலும் தமது பிள்ளைகளைக் 19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே... உயர்தரத்திற்கான உயிரியல்

வேலைக்கு ஆள்சேர்ப்பு

சிறி கௌதமன் ஹாட்வெயார்

கட்டட பொருள் விற்பனை நிலையம்

கலைமதி வீதி, புத்தூர் மேற்கில் அமைந்துள்ள
ஹாட்வெயார் விற்பனை நிலையத்திற்கு கணக்குப் பதிவாளர்
(பெண்) தேவைப்படுகின்றார். தொடர்புகளுக்கு : 0776911089



உரிமையாளர் :
K.மகாதேவன்,
கலைமதி வீதி, புத்தூர் மேற்கு.
(R/100)

# இந்திய வீட்டுத்திட்டத்திற்கான திட்டமிடல் செயலகம் யாழில்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான திட்மிடல் செயலகம் கடந்த 20 ஆம் திகதி முதல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையில் இயங்கி வருவதாக பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும் சுமார் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தச் செயலகம் பயனாளிகள் தெரிவு மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.பிரதான வீதி, கச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான விளக்கங்களையும், பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளமுடியும் எனவும் தெரிய வருகின்றது. (பா)

## புத்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி ஒன்று யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

ஒருவாரகாலமாக இடம்பெறும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நிறைவடையவுள்ளது.

இக்கண்காட்சி காலையில் இருந்து மாலைவரை அலுவலக நேரத்தில் இடம்பெற்றுவருவதாக யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் இமெல்டா கருணாகரன் தெரிவித்துள்ளார். (21)

# நீதிமன்ற கட்டடத்தொகுதியைப் பார்வையிட்டார் அமைச்சர் ஹக்கீம்



யுத்தத்தால் அழிவடைந்து தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மல்லாகம் நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பார்வையிட்டார்.

மாலை 3.30 மணிக்கு அப்பகுதிக்குச் சென்ற அமைச்சர் புதிய கட்டடத்தொகுதியைப் பார்வையிட்டார். அத்துடன் மல்லாகத்தில் உள்ள தற்போதைய நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகளை சந்தித்து நீதிமன்றங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் அதிகமான வழக்குகள் மல்லாகம் நீதிமனறத்திற்கே வருவதாகவும் 8 இற்கு மேற்பட்ட பொலிஸ நிலையங்கள் இந்த நீதிமன்றத்தின் கீழ் செயற்பட்டு வருவதாகவும் இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் பொலிஸார் சாதாரணமாக தீர்த்து வைக்கக் கூடிய பிரச்சினைகளையும் நீதிமன்றத்திற்கே அனுப்பிவிடுகின்றனர். குறிப்பாக தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் கூட நீதிமன்றத்திற்கு பொலிஸாரால் அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

பலாலி மற்றும் காங்கேசன்துறை போன்ற பகுதிகளில் இருந்து வரும் வழக்குகள் பெருமளவானவை இராணுவத்துடன் சம்மந்தமாக இருப்பதால் இதனை அணுகுவது சிரமமாக இருப்பதாகவும் அமைச்சரிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (02)

## அனுப்பிவைக்காத கூட்டறிக்கை; ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் மாதாந்த கூட்டறிக்கை உறுபபினர்களுக்கு அனுப்பி வைக்காத நிலையில் சபை உறுப்பினர் நாளையதினம் ஆர்ப்பாட்டம ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேசசபையின் சபை உறுப்பினர்களுக்கான மாதாந்த கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கான அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு பிரதேசசபை செயலாளரால் கடந்த வருட அறிக்கைகளும், இவ்வருடத்திற்கான காலாண்டு அறிக்கையும் வழங்கப்படாமல் இருப்பதால் பிரதேச சபைத் தவிசாளர் தீர்மானங்களை அமுல்படுத்த முடியாமல் இருப்பதால் தலைவரால் இச்சபையை நடத்தமுடியாத நிலை காணப்படுகின்றது.

பிரதேசசபைத் தலைவர் பதவிவிலக வேண்டுமென உறுப்பினர் செல்லையா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

சபை உறுப்பினர்களுக்கு வரும் கடிதங்கள் செயலாளரால் சபையில் சமர்ப்பிக்கப்படாமல் இருந்து வருகின்றது.

இதனால் சபை உறுப்பினர்கள் ஒன்றுகூடி இவ் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (140)

# "சொறி" சொல்லித் தப்பிய விசித்திரமான திருடர்கள்

வீடு புகுந்த திருடர்கள் கையில் எதுவும் அகப்படாத நிலையில், வீட்டு உரிமையாளருக்கு சொறி சொல்லி தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று மண்டைதீவில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இரவு நேரத்தில் கடையோடு சேர்ந்த வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர்களுக்கு ஒன்றும் கிடைக்காததால் கடை முதலாளியின் கழுத்தைத் தடவியுள்ளனர்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்ட முதலாளி திருடனின் கையைப் பிடித்துக்கொண்டார். திருடர்கள் 'சொறி சொறி' என்று சொல்லி பிடியை விடுத்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

கடைக்குச் சொந்தக்காரரின் மனைவியின் கழுத்தென்று நினைத்து நகை ஏதாவது இருக்கும் என்ற நிலையில் இவர்கள் கழுத்தைத் தடவியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பிறவியிலேயே உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் மனைவியின் உதவியுடன் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மூன்று சில்லு வண்டியில் பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு வந்து சிறுவியாபாரம் செய்து வருபவர்.

இத்திருட்டு முயற்சி தொடர்பாக மண்டைதீவு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (23)

# "சமாதான உதயம்" யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். படைத்தலைமையகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சமாதான உதயம்' தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு தின கொண்டாட்டம் 2013 நிகழ்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.நகரசபை மைதானத்தில் மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது. முன்பதாக அமைச்சர் உள்ளடங்கிய அதிதிகள் மங்களவிளக்கேற்றி வைத்ததைத் தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த விற்பனைக் கூடங்களையும் பார்வையிட்டனர்.

இதனிடையே ஏனைய வினோத விளையாட்டு நிகழ்வுகளிலும் குறித்த அதிதிகள் குழுவினர் பங்கெடுத்துக் கொண்டனர். நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள 'சமாதான உதயம்' சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, வடமாகாண கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் குணவர்த்தன, மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ன ஆகியோருடன் நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அரையிறுதிப் போட்டிகள்

(கொக்குவில்)

கொக்குவில் மத்தி சனசமூக நிலையம் நடத்தும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான அரை இறுதிப்போட்டிகள் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1 மணிக்கு சென்றல் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்டு ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (42)


## சிறுமி மீது துஷ்பிரயோகம்; பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவின் புலோலிப்பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சிறுமியின் உறவினரான 20 வயதுடைய இளைஞன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

கடந்த வாரம் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதன் பிற்பாடு பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்து சிறுமியின் பாதுகாவலர்களினாலேயே பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.



சாவகச்சேரி தென்மட்டுவில் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது முதன்மைக் கும்பம் வீதியுலா வருவதையும், மூலஸ்தான தூபி பிரதம குருவினால் அபிஷேகம் செய்யப்படுவதனையும், கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட நாதஸ்வரக் குழுவினரில் ஒருபகுதியினரையும் காணலாம். (படங்கள்: ஆர்.இராஜகுமார்)



வடமாகாணத்தின் மும்மொழி அமுலாக்கல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது வடமாகாண ஆளுநர் வீ.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படங்கள்: கே.நந்தகுமார்)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையில்லை நுகர்வோர் பாதிப்படைவதாக விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்களினால் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவைக் கருவிகளில் பெரும்பாலானவை முத்திரையிடப்படாமலும் சில நிலையங்களில் நிறுத்தலில் படிகள் பயன்படுத்தப்படாமல் வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுவதால் உரிய நிறுவைகள் இல்லாமல் இருப்பதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தைகிழக்கு, புதுக்குடியிருப்பு, வெலிஓயா, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களிலேயே இவ்வாறான நிலை காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்குள்ள வர்த்தக நிலைய வர்த்தகர்கள் 'சிலர் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடாமல் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் சிலர் நிறுத்தல் அளவையின்போது படிகளுக்கு பதிலாக நிறைக்கேற்ப புளி உருண்டை, தேயிலைப் பைக்கற், தூள் பைக்கற் என்பவற்றை பயன்படுத்துவதாகவும், இதனால் சரியான நிறுத்தல் அளவை இல்லாது பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களின் பின்னர் இம் மாவட்டத்தில் மீள்குடியேறி வாழ்வாதார ரீதியாக மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வரும் நிலையில் பணத்தைக் கொடுத்துப் பொருட்களை வாங்கும் தமக்கு இவ்வாறு உரிய அளவைகள் இன்றி பொருட்களை நிறுத்து வழங்குவது வயிற்றில் அடிக்கும் செயற்பாடு என சுட்டிக்காட்டும் மக்கள் தாம் ஒன்றும் கதைக்க முடியாது பொருட்களை வாங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, நுகர்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடப்பட்டு உரிய வகையில் படிகள் மட்டும் பயன்படுத்தும் வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உதவிப்பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸ்தாபல், பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 - 28 வயதுக்குட்பட்டவர்கள், க.பொ.த (சா/த) பரீட்சையில் கணதத்துடன் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சிததி பெற்று ஒரேதடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் உடற்தகைமை, பார்வை தொடர்பான தேவை, ஆட்சேர்ப்புமுறை பரீட்சை, நியமனக் கொள்கைகள், சேவை நிபந்தனைகள் மற்றும் தேவையான ஆவனங்கள் போன்ற விபரங்களை (26.04.2013 ) வெள்ளிக்கிழமை அரசாங்க வர்த்தமானியில் பார்வையிடலாம். (105)

♦♦♦

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 2014/ 2016 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்ளோமா பாடநெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இப்பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம் / தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2013 யூலை 27 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

விவசாய டிப்ளோமா கற்கைநெறிக்கான தகைமைகள், பாடநெறிக்கான விண்ணப்பிக்கும் முறை, பரீட்சை நடைபெறும் இடங்கள், பரீட்சை முறைமை, தெரிவு செய்யப்படும் முறை போன்ற விபரங்களை 26.04.2013 வெள்ளிக்கிழமை வெளியான அரசாங்க வர்த்தகமானியில் பார்வையிடலாம். (105)

# ஆமைவேகத்தில் வடிகால் அமைப்பு

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக உள்ள வடிகால் அமைக்கும் பணிகள் ஆமைவேகத்தில் நடைபெறுவதால் இதனூடான போக்குவரத்து நெருக்கடியின் மத்தியில் இடம்பெறுவதாக மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

வடிகால் அமைக்கும் பணிகளில் முதற்கட்டமாக ஒரு வழிப்பாதையில் அமைப்பதால் மற்றைய வழிப்பாதையே போக்குவரத்துக்காக விடப்பட்டுள்ளது.

எனினும், இப்பாதையினூடாக செல்லும் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்ல முடியாது. ஒன்றன் பின் ஒன்றாகவே செல்லவேண்டியுள்ளதாக தெரிவிக்கும் மக்கள் வடிகாலமைப்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு உரியவர்களை கேட்டுள்ளனர். (109)

# வீட்டுத்திட்ட விண்ணப்பங்கள் கையளிக்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம்களின் இந்திய வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3..45 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் முயற்சியினால் பயனாளிகளுக்குரிய ஆவணங்கள் பாரிய வேலைத்திட்டத்துடன் பெறப்பட்டுள்ளன.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் பிரதேச செயலரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் கையளிக்கப்படும்.

இந்நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர், வடமாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாநகர முதல்வர், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர். (105)

# வீதி அகலிப்புப் பணிகள் துரிதப்படுத்துமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - யாழ். வீதியின் வீதி அகலிப்புப் பணிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

2 வார இடைவெளியின் பின்னர் மீண்டும் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வீதி அகலிப்புப் பணிகள் தாமதமாக நடைபெறுவதால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பொதுமக்கள், வாகன சாரதிகள் சிரமங்களுக்குள்ளாகுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் வீதி அகலிப்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு மக்கள் உரிய அதிகாரிகளை கேட்டுள்ளனர். (109)

# நெசவுசாலையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் மேற்கில் உள்ள நெசவுசாலையானது கடந்த பல வருடங்களாக இயங்காத நிலையில் இருப்பதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்பு இயங்கி வந்த இந் நெசவுசாலை நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்திற்குப் பின்னர் இயங்காத நிலையில் உள்ளதுடன், அதன் சுற்றுப் புறச்சூழலும் மாசடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த நெசவுசாலையை மீளப் புனரமைப்பு செய்து இயங்கினால் யுவதிகள் வேலைவாய்ப்புக்காக நன்மையடைவர் எனத் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இதனை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினரைக் கேட்கின்றனர்.

# பருத்தித்துறையில் விபத்து; மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற விபத்து ஒன்றில் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசலையின் அவ்சர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி பிற்பகல் அங்கு மரணமடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்நத சரவணபவானந்தம் றுக்குமணி (வயது - 70) என்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் பருத்தித்துறைக்கும் மந்திகைக்கும் இடையில் இவர் கால்நடையாக பயணித்துக் கொண்டிருக்கையில் பின்புறமாக வந்த உழவு இயந்திரத்தின் பெட்டி இவரைத் தட்டிவிடவே, அவர் பின் தலை அடிபட நிலத்தில் விழுந்து படுகாயமடைந்தார்.

அந்நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலை யிலேயே அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் மரணமடைந்ததாக யாழ். போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட உழவு இயந்திரத் தின் சாரதி பருத்தித்துறை பொலிஸாரினால் விசாரிக் கப்பட்டதாகத் தெரியவருகிறது. சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா)

# "பஸ்" மீது கல் வீசிய மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி 'பஸ்' மீது கல் வீசிய குற்றத்திற்காக மூன்று சந்தேகநபர்கள் மல்லாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராநத ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் பொலிஸாரினால் வெளியிடப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் தெல்லிப்பளையையும் ஒருவர் கட்டுவனையும் சேர்ந்தவர்கள எனவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு குறித்த 'பஸ்' மீது கறகளை வீசித் தாக்குதல் நடாத்தப்பட்டதன் காரணமாக 25 ஆயிரம் ரூபா குறித்த பஸ் வண்டிக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாக மேலும் தெரியவருகின்றது.(பா)

கைவிடப்பட்டவர்களுக்கு கரம்கொடுத்து அவர்களில் இறைவனைக் காண்போம்.. - அன்னை திரேசா

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## என்ன நடக்கிறது கூட்டமைப்பில்!

யாழ்ப்பாணம் வந்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களில் சுரேஷ் பிரேமச்சந்திரனை மட்டுமே சந்தித்துள்ளார். அந்த இரகசிய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை இருவருமே வெளியிடவில்லை. இது அரசியல் நோக்கர்கள் மத்தியில் பல சந்தேகங்களை ஏற்படுத்தி விட்டுள்ளது.

சரியாக ஒரு வருடத்தின் முன்பு கூட்டமைப்பின் அழைப்பில் யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்த வந்திருந்த ரணில், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் தேசியக் கொடியைக் கொடுத்து 'ஜயவேவா' முழக்கங்களிடையே உயர்த்திப் பிடிக்கச் செய்திருந்தார். அதற்குச் சில மாதங்கள் முன்பு நடந்திருந்த வடக்கு உள்ளூராட்சித் தேர்தல் மேடைகளில் 'சிங்களக் கட்சிகளுக்கா தமிழ்க்கட்சிகளுக்கா உங்கள் வாக்கு?' என்று இன உணர்ச்சி பொங்கக் கேட்டுப் பிரச்சாரம் செய்திருந்தனர் கூட்டமைப்பினர்.

கையில் சிங்கக் கொடியைத் திணித்து, இவர்களது 'தேர்தல் கண்டால் எகிறும்' இனமான உணர்ச்சியை அடக்கிவிட்டுச் சென்றார் அப்போது ரணில். இப்போது வட மாகாண தேர்தல் நடைபெறவிருப்பதாகப் பேச்சு அடிபடும் சமயத்தில் யாழ்ப்பாணம் வந்திருக் கும் ரணில், காணி சுவீகரிப்பைக் கண்டிக்கும் அதேவேளை நாட்டின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று பக்குவமாகச் சொல்லி கூட்டமைப்பினரின் எகிறலை அமர்த்தி விடுகிறார்.

ரணிலின் இத்தகைய பேச்சுக்கள் செயல்களை எச்சமயத்திலும் கூட்டமைப்பினர் கண்டித்து ஒரு வார்த்தை பேசுவதில்லை என்பது நாம் முக்கியமாகக் கவனித்துக்கொள்ள வேண்டிய சங்கதி. அட, யாழ்ப்பாணம் வந்த ரணில், சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரைக் கூட அவர்களிடமிருந்து பிரித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு இழுத்துச் சென்றிருக்கிறார், அதையே கண்டிக்க முடியாத யூ.என்.பி விசுவாசம் அவர்களுடையது.

அது ஒருபுறமிருக்க, வடக்கு மாகாணத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கண்டிப்பாகப் போட்டியிடும் என்று உறுதிபட ஊடகங்களிடம் தெரிவித்த ரணில், யாழ்ப்பாணத்தில் அங்கத்துவப் படிவங்களைப் பெருமளவில் தானே விநியோகித்து ஐ.தே.க வுக்கு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளும் முயற்சியிலும் பகிரங்கமாகவே ஈடுபட்டார். இதையும் அவரது விசுவாசிகளான தமிழ்க் கூட்டமைப்பினருக்கு எதிர்க்க முடியவில்லை என்பதுதான் விநோதம்!

ஏனென்றால் ஐ.தே.க வடக்கு தேர்தலில் போட்டியிட்டால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாக்குகளையே களவாடுவதாக இருக்கும். அரசின் எதிர்ப்பு வாக்குகளை இப்படிச் சிதறச் செய்வது அரசுக்கு அனுகூலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இப்போது அந்தக் கேள்வி எழுகிறது. கூட்டமைப்பினர் தங்களுடைய ஆள் என்று காட்டிக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் உண்மையில் அரசாங்கத்தின் ஆளாகத்தான் வந்திருக்கிறாரா?

அவர் வந்தவுடன் முதலில் சுரேஷைச் சந்தித்தது ஏன்? அதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அபிலாசைக்கு எதிராக அவர் வேலைசெய்ய முற்பட்டிருப்பது ஏன்? "கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இன்று அறிவிப்பார் சம்பந்தன்" என்று கூட்டமைப்பினது பத்திரிகை நேற்றுமுன்தினம் முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. இதுவரை எந்த அறிவிப்பும் வரவில்லை, ஏன்?

மாவைதான் வடமாகாண முதல்வர் வேட்பாளர் என்று தமிழரசுக் கட்சியினரிடமிருந்து கசியவிடப்பட்ட செய்திதான் உண்மை என்று தெரிந்துகொண்டதால்தான், கூட்டமைப்பின் பிரிவுகள் இத்தகைய எதிரெதிர் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனவா?

தீர்வை எடுப்பதற்கு ஏதாவது செய்வார்கள் என்று நம்பி தமிழ் மக்கள் பெரும்பான்மையோர் வாக்குகளைப் போட்டு அனுப்பியவர்கள், தீர்வுக் கதைகளை விட்டுவிட்டு "தமிழ்நண்டு" கதையைத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்களா?

- ஆசிரியர்

# புலிகளின் நிழல்தலைவரைத்தேடி சர்வதேச அளவில் வலை வீச்சு

(கொழும்பு)

புலிகள் அமைப்பின் தற்போதைய நிழல் நிலைத் தலைவர் ஒருவரைத் தேடி சர்வதேச அளவில் புதிய நடவடிக்கை ஒன்று முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

சர்வதேச அளவில் செயற்படும் புலனாய்வு அமைப்புக்களின் உதவி இந்த விடயத்தில் நாடப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் மேற்படி தலைவரைக் கைது செய்ய நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் இரகசியமான முறையில் புலிகளுக்கு தலைமை வகித்து வருபவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தியவன செய்தி வெளியிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினரும் சர்வதேச பொலிஸாரும் இணைந்து குறித்த நபரைக் கைது செய்ய முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் குறித்த நபர் தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

குமரன் பத்மநாதனின் பின்னர் விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட தலைவராக குறித்த நபர் கருதப்படுகின்றார்.

சீலன் என்ற பெயருடைய குறித்த நபர் பத்து கடவுச் சீட்டுக்களை பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் சர்வதேச ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் புலனாய்வு நடவடிக்கைள் போன்றவற்றுடன் இவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரபாகரனின் மறைவின் பின்னர் நெடியவன் புலிகளுக்கு தலைமை தாங்குவதாக அறிவிக்கப்பட்டபோதிலும், இரகசியமான கட்டளைகள் அனைத்தையும் இந்தச் சீலன் என்பவரே பிறப்பித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மின்பாவனையாளர்களுக்கான புதிய செயற்திட்ட வரைபு தயார்

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்போருக்கு சலுகை வழங்குவதற்கு புதிய செயற்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது.

மின் கட்டண அதிகரிப்பு குறித்து இப்போது எழுந்துள்ள தீவிர எதிர்ப்புக்கள் காரணமாக அமைச்சர்கள் பலர் மின்சார கட்டண சலுகைகள் தொடர்பில் அமைச்சரவையில் பிரஸ்தாபிக்க உள்ளனர்.

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இது பற்றி கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த 24ஆம் திகதி, இது தொடர்பான விவாதம் நடத்தப்படவிருந்த போதும் சில அமைச்சர்களின் வருகையின்மையால் விவாதம் நடைபெறவில்லை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இது பற்றி தெரிவிக்கையில், மின்சாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி வருகை தராததால் மின்சாரக் கட்டண சலுகை தொடர்பான விவாதம் பிற்போடப்பட்டதுடன், இவ்விவாதம் அடுத்தவாரம் இடம்பெறும் என்றும் கூறினார்.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக பல அமைப்புக்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற நிலையில், நாடாளுமன்றத்திலும் இவ்வாறானதொரு எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவருக்கு மரண அச்சுறுத்தல் செயல் இழந்தது மருத்துவமனை

இனந்தெரியாத நபர் அசிட் வீசி தாக்குதல் நடாத்தப்படும் என மரண அச்சுறுத்தல் விடுத்ததால் வென்னப்புவ - லுனுவில வைத்தியசாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

வென்னப்பு வைத்தியசாலையில் 20 ஊழியர்கள் இவ்வாறு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட குறித்த அச்சுறுத்தல் தொடர்பில் வென்னப்புவ' பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஊழியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று காலை 8 மணியில் இருந்து இந்த பணிப்பகிஸ்கரிப்பு தொடர்கிறது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள வென்னப்புவ பொலிஸார், குறித்த வைத்தியசாலையில் பணியாற்றும் பெண்ணின் கணவரே இவ்வாறு அச்சுறுத்தியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென கூறியதாக தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி சந்தை வர்த்தகர்களுக்கு மின் இணைப்புவழங்குவதில் தாமதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள சிலவர்த்தக நிலையங்களுக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லையென சந்தை வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட புடைவை வாணிப நிலையங்கள், அழகுசாதனப்பொருள் வாணிப நிலையங்கள், தேனீர் நிலையங்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை.

தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நகரத்திலான இந்த கடைகளுக்கு மின்இணைப்பு வசதிகள் வயர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆயினும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையிடம் பல முறை முறையிடப்பட்ட போதும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென சந்தை வியாபாரிகள்தெரிவித்துள்ளனர்.

தமக்கு மின்சார வசதி ஏற்படுத்தித்தர சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக நேற்றுப்பகல் கிளிநொச்சி மின்சார சபையினரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது விடுமுறை நாள் என்பதால் மின்பொறியியலாளர்கள் அலுவலகத்தில் கடமையில் இல்லை எனவும் அலுவலக நாட்களில மின்சார சபை பொறியியலாளரிடமும் இவ்விடயம் குறித்து மேலதிக தொடர்பு கொண்டு தகவல்களை பெறமுடியும் என பதிலளிக்கப்பட்டுள்ளது. (28)

## கேரள கஞ்சாவுக்கு அதிக மவுசு கடற்பரப்பில் வியாபாரம் சூடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்திய கடற்பிராந்தியத்தில் இப்போது கஞ்சா வியாபாரங்களை கட்டத்தொடங்கியுள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் அதிக அளவில் செய்கை பண்ணப்படும் கஞ்சா இவ்வாறு கடல் வழியாகக் கடத்தப்பட்டு நடுக்கடலில் வைத்து வெவ்வேறு கடத்தல் காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

இவ்வாறு நடுக்கடலில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கஞ்சா வர்த்தக நடவடிக்கைகளுடன் இலங்கை இந்திய மீனவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

100 கிலோ கஞ்சாவுடன் நான்கு இந்திய மீனவர்ளும், இரண்டு இலங்கைத் தமிழ் மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கச்சதீவு கடற்பரப்பில் வைத்து குறித்த மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர். (25)



# தமிழ் மக்களை ஏமாற்ற புதிய அவதாரம்

■ சங்கர சிவன்

வடக்கில் புதிய ஜனநாயக இயக்கம் களத்துக்கு வரப்போகின்றது என்றும், அரசாங்கம் மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்து மாபெரும் போராட்டங்களை இந்த இயக்கம் முன்னெடுக்கும் என்றும் மாவை சேனாதிராசா அறிவித்திருக்கின்றார். இந்த அறிவிப்பு கூட்டமைப்பின் அரசியல் பற்றிப் பல கேள்விகளை எழுப்புகின்றது.

இந்தப் புதிய இயக்கம் எந்தவொரு வேலைத் திட்டத்தையோ, தீர்வுத் திட்டத்தையோ முன்வைக்கப் போவதில்லை. மாவை சேனாதிராசா அறிவித்திருப்பதன்படி நில அபகரிப்பு, மக்கள் மீதான தாக்குதல்கள், சோதனை நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு எதிராகக் கண்டனப் போராட்டம் நடத்து வதே புதிய ஜனநாயக இயக்கத்தின் பணியாக இருக்கும். இதைத்தானே இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்து வருகிறது. த.தே.கூ.ஜனநாயக இயக்கமாக இல்லை என்று மாவையும், மற்றைய தமிழரசுத் தலைவர்களும் கருதுவதாலேயே புதிய ஜனநாயக இயக்கம் தேவைப்படுகின்றதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான கயிறிழுப்பு கூட்டமைப்புக்குள் நடைபெறுகின்றது. தமிழ் மக்கள் இந்தப் பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை. கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சியாக இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால், கூட்டமைப்புக்குள் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றிய விவாதம் எதுவும் இதுவரை நடந்ததாக இல்லை. அரசியலற் கட்சியாகப் பதிவு செய்வது பற்றியே தொடர்ந்து பேசுகின்றார்கள். இது உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினையல்ல. சில தலைவர்களின் அரசியல் இருப்பு பற்றிய பிரச்சினை.

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அண்மையில் மன்னார் ஆயரைச் சந்தித்த வேளையிலும் இந்தப் பிரச்சினை எழுந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன்னாள் ஆயுதப் போராளிகளும் இருப்பதால் அதனை அரசியற் கட்சியாகப் பதிவு செய்ய விரும்பவில்லை என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் ஆயருக்குக் கூறியதாகத் தெரிகின்றது. அதே காரணத்துக்காகத்தான் புதிய ஜனநாயக இயக்கம் தேவைப்படுகின்றதா? அதாவது முன்னாள் ஆயுதப் போராளிகள் அங்கம்வகிக்கும் கூட்டமைப்பை ஜனநாயக அமைப்பாகக் கருத முடியாது என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் நினைக்கின்றார்களா?

இந்தப் புதிய ஜனநாயக இயக்கத்தை வடக்கிலேயே ஆரம்பிக்கின்றார்கள். அரசாங்கத்தின் அராஜகத்துக்கு எதிராகப் போராடுவதற்கான இயக்கம் என்று கூறுகின்றார்கள். அப்படியானால் கிழக்கு மாகாணத்தில் அராஜகம் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வதாகின்றது.

இவர்கள் கூறுகின்ற போராட்டங்களை நடத்துவதற்குப் புதிய ஜனநாயக இயக்கம் தேவையில்லை. ஏதாவதொரு பிரச்சினையை மையப்படுத்தி மக்களை அணி திரட்டிச் சத்தியாக்கிரகம் செய்வது, உண்ணாவிரதம் இருப்பது, ஆர்ப்பாட்டங்கள் செய்வதுதான் இவர்களின் போராட்டம். இப்படியான பல கண்டனப் போராட்டங்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் நடாத்திவிட்டார்கள். இப்போராட்டங்களால் தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இனியும் கிடைக்கப்போவதில்லை. பிரச்சினைகளின் தீர்வுக்கு நடைமுறைச் சாத்தியமான கொள்கைத் திட்டத்தை முன்வைத்து நடத்தும் போராட்டங்கள்தான் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியவை. வெறும் கண்டனப் போராட்டங்களால் தலைவர்கள் தங்கள் நாடாளுமன்றக் கதிரைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாமேயொழிய மக்களுக்கு நன்மை இல்லை.

புதிய ஜனநாயக இயக்கம் நடாத்தப்போவதாக மாவை சேனாதிராசா கூறிய போராட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே நடத்தியிருக்கின்றது. எனவே, புதிய ஜனநாயக இயக்கம் வேறு தேவைக்காகவே ஆரம்பிக்கப்படவுள்ளது என்ற முடிவுக்கு வரலாம். அந்த வேறு தேவை என்ன?

தமிழ்தலைமை காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களில் செயற்பட்டு வருகின்ற போதிலும் ஒரே பாணிச் செயற்பாடே தொடர்கின்றது. தமிழரசுக் கட்சி சமஷ்டியையும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டையும் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்த போதிலும் அவற்றை வென்றெடுப்பதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. வெவ்வேறு வடிவங்களில் கண்டன அரசியலையே மேற்கொண்டன. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுக்கான திட்டம் எதையும் முன்வைக்காமல் கண்டன அரசியலைத் தொடர்கின்றது.

“புதிய தொன்னையில் பழைய கள்ளு” என்பது போல ஒவ்வொரு கட்டத்தில் புதுப் பெயருடன் வந்து பழைய அரசியலைத் தொடர்வதே தமிழ்த் தலைமையின் வரலாறாக உள்ளது. இது தமிழ் மக்களின் காதில் பூவைக்கும் வேலை. புதிய பெயரில் வரும்போது ஏதோ புதிதாக நடக்கப்போகின்றது என்று தமிழ் மக்கள் நம்புவார்கள். ஆனால், நடப்பது பழைய அரசியல்தான். இந்த வகையில் இன்னொரு அவதாரம்தான் புதிய ஜனநாயக இயக்கம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்த கண்டன அரசியலையே இதுவும் செய்யப்போகின்றது. பெயர்தான் புதிதேயொழிய செயற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

இப்போது இரண்டு நோக்கங்களுக்காகச் சில தலைவர்களுக்குப் புதிய அவதாரமொன்று தேவைப்படுகின்றது. வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடக்கப்போகின்றது. இந்த நிலையில் புதிதாக ஏதோ செய்யப்போகின்றார்கள் என்ற அபிப்பிராயத்தைத் தோற்றுவித்துத் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக ஜனநாயக இயக்கம் என்று புதிய முகமூடியொன்றைப் போடுகின்றார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பித்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியபோதும் மக்கள் பெரிய எதிர்பார்ப்புடன் அவற்றுக்குப் பின்னால் அணிதிரண்ட அனுபவத்தின் அடிப்படையில் இப்போது அப்படியான நிலையை உருவாக்கலாம் என்று மாவை சேனாதிராசாவும் அவரது அணியினரும் நினைக்கின்றார்கள்.

இனிமேலும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம், அரசாங்கம் அதன் போக்கை மாற்றாவிட்டால் விளைவு விபரீதமாக இருக்கும் என்பன போன்ற பல வீரவசனங்களைச் சில காலமாகக் கேட்கிறோம். கூட்டமைப்பின் செயற்பாட்டு எல்லை ஆர்ப்பாட்டங்களும், சத்தியாக்கிரகமும் மட்டுமே என்பதும் இந்த வீரவசனங்கள் வெறும் வெற்று வேட்டுக்கள் என்பதும் மக்களுக்கு விளங்கிவிட்டது. எனவே மாகாண சபைத் தேர்தல் நெருங்கிவரும் வேளையில் புதிய ஒரு பெயரில் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைப் பிசுபிசுக்க வைப்பது இரண்டாவது நோக்கம். கூட்டமைப்புக்கு அப்பாலுள்ள சக்திகளையும் சமூகத் தலைவர்களையும் ஒன்று திரட்டிப் பலமான அமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற வேளையில் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை அந்த முயற்சியைப் பலவீனப்படுத்திவிடும் என்ற தர்க்கத்தைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் முன்வைக்கலாமல்லவா?

தமிழரசுக் கட்சித் தலைவர்களாக இருந்தாலென்ன? கூட்டமைப்பின் மற்றைய கட்சிகளின் தலைவர்களாக இருந்தாலென்ன? கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது வரை காலமும் போராட்டம் என்ற பெயரில் அடிக்கடி மக்களை வீதியில் இறக்கியிருக்கின்றீர்கள். பொதுக்கூட்டங்களிலும் நாடாளுமன்றத்திலும் வீராவேசமாகப் பேசியிருக்கின்றீர்கள். இதனால் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைத்ததா? எந்தப் பிரச்சினைகள் பற்றி மக்களை உணர்ச்சிவசப்படுத்திப் போராட்டங்கள் நடத்தினீர்களோ அந்தப் பிரச்சினைகளுக்கு அப்போராட்டங்களால் ஏதாவது தீர்வு கிடைத்ததா? எந்தவொரு கொள்கைத் திட்டத்தையும் முன்னெடுக்காமல் கண்டனப் போராட்டம் நடத்துவதே இந்த நிலைக்குக் காரணம் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா? இதே பாணி தொடர்ந்தால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வின்றித் தொடரும் என்பது விளங்குகின்றபோதிலும் உங்கள் நாடாளுமன்றப் பதவிகளை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக இந்த வழியில் செல்கின்றீர்களா?

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் நடத்துவது கொள்கை இல்லாத அரசியல். இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இவர்களிடம் ஒரு கொள்கையும் இல்லை. பிரதேச அபிவிருத்திக்கு இவர்களிடம் ஒரு திட்டமும் இல்லை. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் மற்றைய பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு எதுவும் இவர்களிடம் இல்லை. நடைமுறைச் சாத்தியமற்ற கோஷங்களின் மூலம் தமிழ் மக்களை உசுப்பேற்றுவதுதான் இவர்களின் அரசியலாக இருக்கின்றது. இந்த வெற்று அரசியலிலிருந்து விடுபடுவதுதான் தமிழ் மக்களின் விமோசனத்துக்கான வழி.

> **ஏதாவதொரு பிரச்சினையை மையப்படுத்தி மக்களை அணி திரட்டிச் சத்தியாக்கிரகம் செய்வது, உண்ணாவிரதம் இருப்பது, ஆர்ப்பாட்டங்கள் செய்வது தான் இவர்களின் போராட்டம். இப்படியான பல கண்டனப் போராட்டங்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் நடாத்திவிட்டார்கள். இப்போராட்டங்களால் தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்த நன்மையும் கிடைக்க வில்லை. இனியும் கிடைக்கப் போவதில்லை. பிரச்சினைகளின் தீர்வுக்கு நடைமுறைச் சாத்தியமான கொள்கைத் திட்டத்தை முன்வைத்து நடத்தும் போராட்டங்கள் தான் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியவை. வெறும் கண்டனப் போராட்டங்களால் தலைவர்கள் தங்கள் நாடாளுமன்றக் கதிரைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாமே யொழிய மக்களுக்கு நன்மை இல்லை.**

# “சப்றா பினான்ஸ்” நிதி மோசடி விசாரணை சிக்கிக்கொள்வாரா தமிழ் அரசியல்வாதி

## விடாது தொடர்கிறது பழி

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பாக அரசு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதைத் தொடர்நது இந்த மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பதாக கருதப்படும் முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவர் இந்த விசாரணையின்போது சிக்கிக்கொள்ளும் நிலமை உருவாகியிருக்கிறது.

கடந்த 1980களில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட “சப்றா பினான்ஸ்” நிதிநிறுவனத்தில் நடைபெற்ற பெரும் மோசடிகள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை நடாத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நிறுவனம் அந்த நேரத்தில் அறிவித்த வட்டி வீதங்களால் கவரப்பட்ட வட பகுதி மக்கள் தமது கோடிக்கணக்கான பணத்தை இந்த நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்தனர். அவர்களில் பல தரப்பட்ட மக்கள், அதாவது தமது பிற்கால சீவியத்துக்கென் பணத்தைச் சேமிதது வைத்திருந்தோர், பிள்ளைகளின் திருமணத்துக்காக பணம் வைத்திருந்தோர், காணி பூமிகளை விற்றுப் பணம் வைத்திருந்தோர் என பல வகையினர் அடங்கியிருந்தனர்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இந்த நிதி நிறுவனம் தனது காரியாலயத்தை இழுத்து மூடிவிட்டு பொதுமக்கள் வைப்பிலிட்ட பணத்துக்கு கையை விரித்துவிட்டது. அதனால் பலர ஒன்றும் செய்ய முடியாது பரிதவித்ததுடன், சிலர் அதனால் ஏற்பட்ட மன முடைவதால் மரணித்த சம்பவங்களும் நிகழ்ந்தன. பலர் தமது பணத்தை மீளப் பெற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இந்த நிதி நிறுவனத்தில் பணம் வைப்பிலிட்டோர் சேர்ந்து ஒரு சஙகததை அமைத்து செயறபட முற்படடாராயினும், அதுவும் பலனளிக்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் நடந்த மிகப்பெரிய துணிகரமான நிதி மோசடி இதுதான்.

பிற்காலத்தில் சிலர் இது சம்பந்தமாகப் புலிகளின் உதவியை நாடிய போதிலும், புலிகள் அது சம்பந்தமாக அக்கறை செலுததாததுடன், அந்த நிதி நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகளைப் பாதுகாக்கவும் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின முன்னாள் தலைவரும், உடுப்பிட்டித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான காலஞ்சென்ற மு.சிவசிதம்பரம் அவர்கள் இந்தப் பண மோசடி சம்பந்தமாக அப்போதைய சட்டமா அதிபருடன் பேசி சில நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தாராயினும், அவர் பின்னர் இறந்துவிட்டதால் அம்முயற்சிகள் கைகூடவில்லை.

இந்த நிதி நிறுவனத்தில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஈ.சரவணபவன் ஒரு முக்கிய நிர்வாகியாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவர் மீதும் பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டது. அவர் இந்த நிதி நிறுவனத்தில் மோசடி செய்த பணத்தை வைத்துத்தான் இன்று அவர் நடாத்தி வரும் “உதயன்” பத்திரிகையை ஆரம்பித்தார் என்ற குற்றச்சாட்டுகளும் பொது மக்களால் சுமத்தப்பட்டது.

அவரை “இன்ரபோல்” என்ற சர்வதேச பொலிஸ் நிறுவனம் தேடி வருவதாகவும் பரவலாகக் கதைகள் இருந்தன. அவரும் சில காலம் பொதுமக்களின் கண்களில் படாமலும், யாழ்ப் பாணம் வருவதைத் தவிர்த்தும் இருந்தார்.

காலம் தாழ்த்தியாயினும் அரசாங்கம் இப்பொழுது இந்த நிதி நிறுவன மோசடி குறித்து விசாரிக்க முன்வந்ததை, இந்த நிதி நிறுவனத்தில் பணம் வைப்பிலிட்டவர்கள் மட்டுமின்றி, வட பகுதிப் பொதுமக்கள் அனைவரும் வரவேற்றுள்ளனர்.

இது சம்பந்தமான விசாரணைகளின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மீதும் விசாரணை நடாத்தப்படுமா என்பது இன்னமும் நிச்சயமாகத் தெரிய வரவில்லை. இருந்த போதிலும், “சப்றா பினான்ஸ்” என்றவுடன் மக்கள் சரவணபவனை நினைப்பதாலும், அவர் இந்த நிறுவனத்தில” முக்கியமான பதவியொன்றை வகித்ததாலும், அவரை நிச்சயமாக விசாரிக்க வேண்டும் என்பதே பொது மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள வட மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தனது மைத்துனர் ந.வித்தியாதரனை களமிறக்க சரவணபவன் எம்.பி முறபட்டு வருவதாகக் கூறப்படும் நிலையில் இந்த விசாரணை வர இருப்பது, அவருக்கு ஒரு சோதனை என்றே சொல்ல வேண்டும். அவருக்கு மட்டுமின்றி வட மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கக் காத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இது ஒரு சோதனை என்றுதான் கூற வேண்டும்.

## வீதிவிபத்துக்களுக்கு காரணம் என்ன? உயர் வெப்பநிலை விபத்தை உருவாக்கும்

ஆய்வில் வெளிக்கிளம்பும் அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதும் வீதி விபத்துக்கள் அதிகரித்தமைக்கு தற்போது நிலவும் உயர் வெப்பநிலை காரணமாக அமைந்துள்ளது என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தற்சமயம் நிலவும் கடும் வெப்பமான காலநிலை வாகன விபத்துக்களை தோற்றுவிக்கக் கூடும் என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகவியல் மற்றும் மனநல ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது.

சமூகவியல் தொடர்பான பேராசிரியர் மயூர சமரக்கோன் இதனை தெரிவித்துள்ளார். கடும் வெப்பமான காலநிலை காரணமாக நபர்களுக்கு இடையே இயல்பற்ற சூழ்நிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமூகவியல் ஆராசிக்கு ஏற்ப, வீதி விபத்துக்கள் அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## வேட்பாளர்களைத் தேடும் வேட்டை வடக்கில் இப்போது மும்முரம்

முந்திக்கொண்டு களம் இறங்கியது சுதந்திரக்கட்சி

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட விரும்புவோரிடமிருந்து ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விணணப்பங்களைக் கோரவுள்ளதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 19 பேரும் மன்னார மாவடடத்துக்கு 8 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 8 பேரும் வவுனியா மாவட்டத்துக்கு 9 பேரும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 7 பேருமாக மொத்தம் 51 பேர் கட்சியால் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இந்நிலையில், முதன்முறையாக வட மாகாண சபை நிறுவப்படவுள்ளது. முன்னர் வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபை இயங்கிய நிலையில் அது நீதிமன்ற உத்தரவின் பேரில் பிரிக்கப்பட்டது.

# போதைவஸ்து களஞ்சியம்; கிழக்கில் சுற்றிவளைப்பு

## 700 கிலோ கஞ்சா பறிமுதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை 34 கிலோ 700 கிராம் கஞ்சா கைப்பற்றியதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ரணசிங்க தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து நேற்று இந்த கஞ்சாவை கைப்பற்றியதாக அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் குற்றங்களை தடுக்கும் அதிரடி நடவடிக்கையின் பயனாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.இந்திரனின் ஆலோசனையின் பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஐ.பி.ரணசிங்கவின் வழிகாட்டலில் காத்தான்குடி போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ஜயவர்த்தன, மற்றும் எஸ்.ஐ.உபாலி, ஸார்ஜன் ஜெயசுந்தர, ஸார்ஜன் பத்மசேன மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான விதானகே, மற்றும் ஜயரத்ண ஆகியோர் இந்த கஞ்சாவை கைப்பற்றியுள்ள துடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த வீட்டை சோதனை செய்தபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த 34 கிலோ 700 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்னாள் புலிகள் தெற்கில் சுற்றுலா



(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் முதற்தடவைாக நேற்று தெற்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இவர்கள் முதலில நாடாளுமன்ற கட்டத் தொகுதியைப் பார்வையிட்டுள்ளனர். வடக்கு-தெற்கு உறவுப் பாலத திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட 371 முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் இந்த சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

தெற்கிற்கான விஜயத்தினை மேற்கொண்ட இந்தக் குழுவில் 21 பெண்களும் 350 ஆண்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# துறைமுகங்களின் அபிவிருத்தி ஜப்பானிய உதவியுடன் விரைவில்

(கொழும்பு)

இலங்கையின் துறைமுக அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு நிதி உதவி வழங்க முன்வந்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக இரு நாடுகளும் இணைந்த புதிய அபிவிருத்திச் செயற்திட்டம் ஒன்று இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஜப்பானின் பிரதிப் பிரதமர் டாரா அசோ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். எதிர்வரும் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாரச் மாதம் இலங்கை ஜனாதிபதி ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த போது விடுக்கபபட்ட அழைப்பின் அடிப்படையில் இந்த விஜயம் இடம் பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜப்பானின் சிரேஷட துணை நிதி அமைச்சர் யோகோ ஒப்பு யுச்சியும், பிரதிப் பிரதமர் அசோவுடன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயம் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் துறைமுகத்தை ஜப்பான் பிரதிநிதிகள் பார்வையிடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. துறைமுக அபிவிருத்திக்காக ஜப்பான் இலங்கைக்கு 80 பில்லியன் யென்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தப்பி ஓடினார் சிறைக்கைதி தலை சொறியும் காவலர்கள்

அடையாள அணி வகுப்புக்காக நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஏறாவூரில் வைத்து தப்பிச் சென்றுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இக்கைதிக்கு நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதற்கமைய இக்கைதிக்கான அடையாள அணிவகுப் பொன்று இன்று சுற்றுலா நீதிமன்றத்தில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இதன் பிரகாரம், மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில வைக்கப்பட்டிருந்த கைதியை இன்று சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து சிறைச்சாலை பஸ் வண்டியில் இவரை மறைத்து வைத்து சிறைச்சாலைக்கு அருகில் நின்றவேளை இக்கைதி தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற சம்பவத்தினைத் தொடர்ந்து இக்கைதியை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் பயனளிக்கவில்லை. கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட இக்கைதக்கு 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் இவருக்காக 3 அடையாள அணி வகுப்புக்களும் பதிவாகியிருநதன.

# மணிக்கூட்டுக்கோபுர சுற்றுவட்டங்களில் வெளிச்ச சமிக்ஞைகளை அமைக்கபணிப்பு

(யாழ்ப்பாணம்)

மணிக்கூட்டுக் கோபுரத்தின் மூன்றுபக்க வீதிகளிலும் அமைக்கப்பட்டு வரும் சுற்றுவட்டங்களில் பாதுகாப்பு வெளிச்ச சமிக்ஞைகளை அமைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாநகர சபையிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.



குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மணிக்கூட்டுக் கோபுரத்தின் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதுடன் அங்கு புதிதாக அமைக்கப்பட்டு வரும் மூன்று சுற்று வட்டங்களிலும் பொதுமக்களினதும் வாகனங்களினதும் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு வெளிச்ச சமிக்ஞைகளை அமைக்குமாறு பணித்தார்.

அத்துடன், இரவுவேளைகளில் மணிக்கூட்டுக் கோபுரத்தை சூழவும் மின்விளக்குகளை பொருத்துவது அதன் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இதனிடையே நீண்டகாலமாக பழுதடைந்திருந்த மேற்படி கோபுரத்திலுள்ள மூன்று மணிக்கூடுகளும் அமைச்சரின் பணிப்புரைக்கமைய புதிதாக பொருத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருட்டுச் சம்பவம் அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் அமைந்துள்ள கிறீஸ்தவ தேவாலயம் ஒன்றை உடைத்து இரண்டு பித்தளை விளக்குகள் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டிருப்பதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி இரவு நடைபெற்ற இந்தத் திருட்டுச்சம்பவத்தில் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட இரு பித்தளை விளக்குகளினதும் பெறுமதி 24ஆயிரம் ரூபா என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் இந்தத் திருட்டுச் சம்பந்தமாக செய்யப்பட்டிருக்கும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும். பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் இது குறித்து அறிக்கை யாழ்.நீதவான் நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப் பிலேயே இந்தத்தகவல்-வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# ஏ.ரி.எம் வசதியை ஏற்படுத்தக் கோரிக்கை

(கல்வயல்)

கைதடிப்பகுதியில் இலங்கை வங்கியின் கிளை ஒன்று செயற்பட்டு வரும் வேளையில் அப்பகுதிக்கான (A.T.M) இயந்திரம் இலகு மற்றும் விரைவு பணம் மீளப் பெறும் வசதிகள் இல்லையென கைதடி வாழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதாவது அப்பகுதி மக்கள் வங்கிக்கிளை மூலமாகவே பணம் மீளப்பெறல் செயற்பாடுகளை செய்துவருவதாகவும் விடுமுறை மற்றும் வங்கியின் கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் பணம் மீளப்பெற முடியாதுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். அப்பகுதி மக்கள் அவசர தேவைக்காக பணம் (A.T.M) மூலம் பெற்றுகொள்ள முனையுமிடத்து யாழ்ப்பாணம் இல்லையேல் சாவகச்சேரிப்பகுதிகளுக்கே செல்லவேண்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றனர்.

மேலும், அப்பகுதிக்கான (A.T.M) இயந்திர வசதிகளை செய்து தருமிடத்து தாம் பெரும் பயன்பெறுவதாகவும் உதவியாக இருக்குமெனவும் அம்மக்களினால் குறிப்பிடப்படுகிறது.

எனவே, இது குறித்து சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகம் கவனமெடுத்து குறைந்தளவு காலத்திற்குள் (A.T.M) வசதிகளைச் செய்து மக்கள் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (43)

## நடைபாதைக் கடைகளால் போக்குவரத்து அசௌகரியம்

(குருநகர்)

யாழ்.பாங்ஷால் வீதி ஆறாம் குறுக்கு வீதிச் சந்தியில் வீதியோரங்களில் நடைபாதைக் கடைகள் போடப்படுவதால் போக்குவரவுகளில் அசௌகரியங்கள் ஏற்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர். தேங்காய், மாங்காய், பழவகைக் கடைகள் திடீரென முளைவிடுகின்றன. நடைபாதைக் கடைகளும் தோன்றிவருவதால் பாதசாரிகள், வாகனசாரதிகளின் போக்குவரவுக்கு இடையூறாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (68)

## பொய்யுள்



மூலபாரதி

### மின்சார வாழ்வு!

மின்சா ரத்தால் தாக்குண்டார்
மக்கள் மற்றோர் தடவையும்!
'கன்சாட்' டிலரசு கட்டணத்தை
கடுமை யாக்கூட்டி விட்டதாலே!

எதற்கெ டுத்தாலும் மின்னுபகரணம்
எவ்வகை உடுப்புத் தோய்ப்பதற்கும்;
சதைப் பிடிப்பைச் சரிசெய்யவும்
சதாதொலைக்காட்டி பார்ப்பதற்கும்!

மட்டென் றில்லை சுடுநீராக்க
மதிய உணவை சமைத்திடவும்;
சட்டென செய்ய மின்னுபகரணம்
சார்ந்து விட்டது நம்வாழ்க்கை!

# மணவாளக்கோலம்

(யாழ்.நிருபர்)

காரைநகர், புது றோட், கிழவன் காடு அருள் மிகு ஸ்ரீ கந்த சுவாமி கோவிலின் மணவாளக்கோலத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது. காலை 1008 சங்காபிசேகத்துடன் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி எழுந்தருளி வருவார்.

மாலை7 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியாக தமிழருவி த.சிவகுமாரனின் "கந்தன் கனியமுதம்" எனும் விடயத்தில் சொற் பொழிவு இடம் பெறும். அத்துடன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (10)

# முரசின் இன்றைய பலன்

(28.04.2013 - ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் திகதி.
நட்சத்திரம் அனுசம் பிற்பகல் 01.21 வரை. திருதியை
முன்னிரவு 07.41 வரை. இராகுகாலம் 04.28 - 05.58 வரை.
சுபநேரம் 08.58 - 10.28 வரை. மரணயோகம், கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் நல்ல சிந்தனைகள். புதியவர்களின் அறிமுகம், நட்பு கிடைக்கும். திறமைமிகு செயலால் தொழிலில், திருப்திகர வளர்ச்சி. பணவரவு முன்னேற்றம் பெறும். கணவன் மனைவி அன்யோன்யம். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| ரிஷபம் | வேலையில் அதிக ஆர்வம். குடும்பத்தினர் உதவிகரமாக செயல்படுவர். தொழில் வளர்ச்சிப் பணி, இனிது நிறைவேறும். பணவரவும், நன்மையும் கூடும். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். இசை இரசித்து ஒய்வை அனுபவிப்பீர்கள். |
| மிதுனம் | சிலரிடம் முன்பு கேட்டிருந்த உதவி இன்று கிடைக்கும். உற்சாகம் பெறுவீர்கள். தொழில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். ஆதாய பணவரவு. வெகுநாள் நினைத்த பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தினரின் ஊக்கத்தால் புதிய திட்டங்கள் போடுவீர்கள். |
| கடகம் | உங்கள் துன்பத்தை பிறரிடம் காட்ட வேண்டாம். தனி முயற்சிக்கு நன்மை வந்து சேரும். தொழிலில், சிறு மாற்றம் நடந்தேறும். வரவை விட செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணத்திற்கு வாய்ப்பு. எதிர்பார்த்துச் சென்றது எளிதாக நிறைவேறி மகிழ்வீர்கள். |
| சிம்மம் | வெளிவட்டாரத் தொடர்பு, சிறு தொந்தவு தரும். குடும்பப் பொறுப்புணர்ந்து, செயல்படுக. தொழிலில், அளவான மூலதனமிடுகை. சராசரி பணவரவு. எல்லோர்க்கும் உதவ நினைப்பீர்கள். அயலவரிடத்தில் மரியாதை. உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| கன்னி | மனதில் தன்மான உணர்வு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். ஒரு வெற்றிக்கு பத்து முயற்சி செய்யும் மனநிலை. தொழில், செழித்து வளர, வாய்ப்பு வரும். பணவரவில் முன்னேற்றம். வெகுநாள் தேடிய பொருள் கைவந்து சேரும். |
| துலாம் | செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். உழைப்பிற்கான பலன், அதிகமாய் கிடைக்கும். தொழில், செழித்து சமூக அந்தஸ்து கூடும். பணவரவு திருப்திகரமாகும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகள் பெருமைப்படுத்துவர். |
| விருச்சிகம் | உடல் நலத்தில் அதிக கவனம் வேண்டும். மறதித் தொல்லையால் செயல்கள் தாமதமாகும். தொழில், சராசரி அளவில். செலவில், சிக்கனம் பின்பற்றுவீர்கள். பெண்கள் இரவல், கொடுக்க வாங்க வேண்டாம். மாலையில் ஆறுதல் தரும் செய்தி வரும். |
| தனுசு | நண்பருக்கு உதவி, நட்பை வளர்ப்பீர்கள். தொழிலில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதர்ய பணவரவு. இல்லறத்துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டும் சலுகையும் கிடைக்கும். கலைஞர், மாணவர் உயர்ச்சி. |
| மகரம் | உங்கள் நல்நோக்கு புரியாமல் சிலர் பரிகசிப்பர். மனதில் நம்பிக்கையுடன் இருப்பது அவசியம். தொழில், செழிக்க சில திருத்தம் பின்பற்றுவீர்கள். அளவான பணவரவு. இறை காரியங்களில் ஈடுபாடு. குடும்பத்தில் விசேஷம் நடத்தத் திட்டமிடுவீர்கள். |
| கும்பம் | அன்புக்குரியவரின் மாறுபட்ட நடத்தை வருத்தம் தரும். சொந்த வேலைகளில் மூழ்கி மறப்பீர்கள். போட்டியில் வெல்ல கடுமையாக உழைப்பீர்கள். தொழில், நிலைமை சீராகும். தாராள பணவரவு. பிறர் பார்வைக்காக அதிக செலவு செய்ய வேண்டாம். |
| மீனம் | எதிர்மறையான எண்ணமுள்ளோரிடம் விவேகமுடன் விலகுவீர்கள். வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். தொழிலில், உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. சூழ்ந்திருப்போருக்கு நலன் வரும் வகையில் ஒரு புத்திசாலித்தன முடிவெடுப்பீர்கள். |

# சீன மக்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுவது பெரும் பிரச்சினை

சீனாவிலிருந்து ஏராளமானோர் அருணாச்சல பிரதேசத்திற்கும் ஊடுருவியுள்ளனர். இந்தியாவின், லடாக் பகுதியில், சீன இராணுவம் அத்துமீறி நுழைந்துள்ள நிலையில், அருணாச்சல பிரதேசத்தில், சீன மக்கள் இடம்பெயர்தல் பலகாலமாக, இயல்பாகவே நடந்து வருகிறது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பகுதியில், கடந்த, 15 ஆம் திகதி முதல், சீன இராணுவ வீரர்கள் அத்துமீறி நுழைந்து, கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர். இது, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் உரசலை ஏற்படுத்தியுள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அருணாச்சல பிரதேசத்திற்கு, எல்லையோர சீன கிராமங்களில் இருந்து, ஏராளமானோர் ஊடுருவுவது, நீண்ட காலமாக இயல்பாக நடந்து வருகிறது.

இந்தியச் செய்திகள்

சீனாவைச் சேர்ந்த அந்நாட்டு மக்கள், உணவுக்காகவும், பிற தேவைகளுக்காகவும், அருணாச்சல பிரதேசத்திற்குள் நுழைகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதி, சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், எவ்வித நிர்வாக வசதிகளும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. நிர்வாக பகுதிக்கும், "இப்பகுதிக்கும் இடையே உள்ள நீண்ட தூரம்தான் இதற்குக் காரணம். சரியான சாலை வசதியோ, போக்குவரத்து, மின் வசதியோ இல்லாமல் பரிதவிக்கும் சீன எல்லையோர மக்கள், தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, இந்தியப் பகுதிக்குள், அதாவது, அருணாச்சல பிரதேசத்திற்குள் நுழைவது வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இது பற்றி, அருணாச்சல் மேற்கு லோக்சபா தொகுதி எம்.பி.தகாம் சன்ஜோய் கூறுகையில், "சீன இராணுவ வீரர்கள் அத்துமீறலை விட, அந்நாட்டு மக்களின் ஊடுருவல் தான், மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. எல்லையோர கிராமங்கள் மட்டுமின்றி, அருணாச்சலம உட்புறம் வெகுதூரம் வரை ஊடுருவியுள்ளனர்" என்றார்.

# 8ஆவது பலம்மிக்க நாடாக இந்தியா திகழ்கின்றது

இராணுவ செலவினம், எரிபொருள் பாதுகாப்பு, தனிநபர் வருமானம், மக்கள் தொகை, தொழில் நுட்ப ஆளுமைத்திறன் போன்ற தகுதிகளின் அடிப்படையில் சர்வதேச அளவில் சக்தி வாய்ந்த நாடுக்ளின் பட்டியலை புதுடில்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் தயாரித்துள்ளது. உலகின் மிச சக்தி வாய்ந்த 27 நாடுகளின் இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தையும், சீனா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

பொருளாதார பலத்தில் இந்தியா 8ஆவது இடத்திலும், இராணுவ பலத்தில் 7ஆவது இடத்திலும், தொழில்நுட்ப ஆளுமைத்திறனில் 17ஆவது இடத்திலும், எரிசக்தி பாதுகாப்பில் 20 ஆவது இடத்திலும் உள்ளது.




# 500 கிலோ வெடிமருந்து பறிமுதல்

கர்நாடகாவில் 500 கிலோ வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குண்டுகள் தயாரிக்கும் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநில சட்டசபைக்கு வரும் மே 5ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலையொட்டி வன் முறை சம்பவங்கள் நடைபெறலாம் என்னும் உளவுத் தகவல்கள் வெளியானதால் மாநிலமெங்கும் வாகன சோதனையை தீவிரமாக மேற்கொள்ள மாநில தேர்தல் கமிஷன் பறக்கும் படைகளை அம்மைத்துள்ளது.

இதனையடுத்து, கோலார் மாவட்டத்தில் இருந்து பெங்களூர் நகருக்குள் செல்ல முயன்ற வாகனங்களை பறக்கும் படையினர் தீவிரமாக சோதனையிட்டனர். அப்போது, நிற்காமல் சென்ற ஒரு வாகனத்தை விரட்டிப் பிடித்து சோதனையிட்ட போது, தலா 20 கிலோ எடையுள்ள 25 மூட்டைகளில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் 'அம்மோனியம் நைட்ரேட்' என்னும் மூலப்பொருள் பிடிபட்டது. இவற்றைக் கடத்த முயன்ற மெஹபூப் என்ற நபரை பறக்கும் படையினர் கைது செய்தனர். கைப்பற்றப்பட்ட இரசாயனம் தென் கொரிய நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# சர்வதேச கைத்தொழில் பாதுகாப்பு தினம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக அமைவது உழைக்கும் வர்க்கமாகும். எமது நாட்டிலும் சுமார் 8.2 மில்லியன் தொழிலாளர்கள் உள்ளனர்.

இவர்களில் குறிப்பாக அரசதுறை, தனியார்துறை என இருதுறைகள் காணப்படுகின்றன. தனியார் துறை சார்ந்த உழைப்பாளர்களில் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடுவோர் பெரிதும் சுயதொழிலாகவே மேற்கொள்கின்றனர். இவர்கள் தவிர தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோர் தொடர்பாகவே இங்கு அதிகம் கருத்தில் கொள்ளப்படுகின்து. காரணம் இவர்களிடையே காணப்படுகின்ற தொழில்தருநர் தொழில்புரிவோர் உறவு முறையாகும். (Employer - Employee Relationship)

எனவே இவர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் மற்றும் சமூகப்பாதுகாப்பு, பதவிஉயர்வு, சலுகைகள் போன்றவை பிறரில் தங்கியுள்ளதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இந்த தொழில்தருநர் - தொழில்புரிவோர் உறவு மேம்படுவதற்காக ஒரு பாரிய பணியை உலகெங்கும் உள்ள அரசதுறையினர் மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் இலங்கை அரசின் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழிற் திணைக்களம் இப்பெரும்பணியை செவ்வனே ஆற்றுகின்றது.

குறிப்பாக தொழிற்சாலைகளில் ஊழியரின் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு தொழிற்சாலைகளில் விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற ஆரோக்கியமான தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டு தொழிற் திணைக்ளத்தின் கைத்தாழில் பாதுகாப்புப் பிரிவு செயற்படுகின்றது.

தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் பிரதம தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளரின் தலைமையில் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு இயங்குகின்றது.

எமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே இங்கு தொழிலாளரின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது நாம் அறிந்ததே. அதாவது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் தொழிலாளரின் பாதுகாப்பு தொடர்பான அனைத்து விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

இச்சட்டமானது பிரதம தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளரின் தலைமையின் கீழுள்ள அனைத்து மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்றது.

தொழிற்சாலைகள் என்னும் வரையறைக்குள், சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி அரிசி ஆலை, அரைக்கும் ஆலை, மர அரிவு ஆலை, தச்சுத் தொழிலகம், கல்லுடைக்கும் ஆலை, இரும்புத் தொழிலகம்? தும்புத் தொழிற்சாலை, வாகனத் திருத்தகம், வாகன சுத்திகரிப்பு நிலையம், ரயர் திருத்தகம், பொறியியல் வேலைத் தளம், வெல்டிங் வேலைத் தளம், வார்ப்பகம், செங்கட்டி, ஓடு உற்பத்தி செய்யும் வேலைத் தளம், கட்டட நிர்மாணத் தளம் (6 வாரங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்த காலமுடையவை), துறைமுகம், கண்ணாடியிழைப்படகு நிர்மாணிக்கும் வேலைத் தளம், பிளாஸ்ரிக் ஒட்டும் வேலைத்தளம், அலுமினியம் பொருத்தும் வேலைத்தளம், பனிக்கட்டித் தொழிற்சாலை, மின்சார சபை, மின்சார உபகரணத் திருத்தகமும் மீள்சுற்றும் நிலையமும், வானொலி, தொலைக்காட்சி, கணனித் திருத்தகம், மணிக்கூடு திருத்தகம், மின்முலாமிடும் வேலைத்தளம், மின்கலம் மின்னேற்றும் வேலைத்தளம், மின்தறி நிலையம், புடவை அச்சிடும் நிலையம், பதிப்பகம், வெதுப்பகம், உணவு தயாரிக்கும் நிலையம், நகைத் தொழிலகம், படமாடம், தொலைத் தொடர்பு மத்திய நிலையங்கள் போன்ற அனைத்து ஆலைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக தொழிற்சாலைப் பரிசோதனையின் போது பின்வரும் பாதுகப்பு மற்றும் பிற விடயங்கள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகின்றன.

01.சுழலும் இயந்திரத்தின் பகுதிகள் காவலிடப்பட்டுள்ளதா?

02.நீராவிக் கொதிகலன்கள், நீராவி வாங்கிகள், காற்று வாங்கிகள், வாயு வாங்கிகள், வாயுக்கொள்கலன்கள், பாரம் உயர்த்திகளும் தூக்கிகளும், சங்கிலிகள், வடங்கள், மற்றும் பிற தூக்கும் பொறிகளும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டுள்ளதா?

03.பாதுகாப்பான மின் இணைப்பு காணப்படுகின்றதா?

04.ஊழியருக்கு பொருத்தமான தனிநபர் பாதுகாப்பு கசவங்கள் (Personal Protective Equipment) வழங்கப்பட்டுள்ளதா?

05.தொழிற்சாலையில் ஊழியர் அதிக இடநெருக்கடியில், அதிக வெப்பமான அல்லது அதிக குளிர்ந்த சூழலில், அவிற்கு அதிகமான் இரைச்சலில், மங்கலான அல்லது அதி பிரகாசமான ஒளியில், போதிய காற்றோட்டம் அற்ற சூழலில், புகை, தூசி ஏதேனும் கதிர்வீச்சு, அதிர்வு எள்ள இடத்தில் வேலையில் ஈடுபடுகின்றாரா?

06.ஊழியருக்க போதிய இடவசதியின்மை (Ovet crowd) காணப்படுகின்றதா?

07.தீ விபத்துக்களைத் தவிர்க்கப் பொருத்தமான தீ அணை கருவி, தீ, அணைப்பு வசதி காணப்படுகின்றதா?

08.தீ விபத்துக்களைத் தவிர்க்கப் பொருத்தமான வெளிச்செல்லும் வசதி காணப்படுகின்றதா?

09.தொழிற்சாலையின் சுத்தம் பேணப்படுகின்றதா?

10.ஊழியருக்குப் போதிய குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா?

11.மலசல கூட வசதி காணப்படுகின்றதா?

12.முதலுதவிப் பெட்டி வசதி காணப்படுகின்றதா?

13.தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளரின் பரிசோதனை அவதானிப்புகளை குறித்துக்கொள்ள பொதுப்பதிவேடு ஒன்று பேணப்படுகின்றதா?

இவற்றுடன் தொழிற்சாலைகள் யாவும் மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(அ) இல் குறிப்பிட்டுள்ளபடி இக் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி தொழிற்சாலைகள் தொடர்பில் உள்ளூர் அதிகார சபை எதுவும் உரிமங்களை வழங்குதலாகாது.

தொழிற்சாலை ஒன்றில் ஏதேனும் விபத்து ஏற்படுமிடத்து அது பற்றி உடனடியாகத் தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவல்கத்திற்கு (படிவம் 10 இல்) அறிவிக்கப்பட்டல் வேண்டும்.

விபத்துக்கள, முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாகப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக எரிய ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்குவதனால் தொழில்சார் விபத்துக்கள், நோய்களைத் தவிர்த்துக்கொள்ள்லாம்.

இதுதவிர கைத்தொழில்ப் பாதுகாப்பு பிரிவினரால் கலந்துரைய்ாடல்கள் கருத்தரங்குகள் என்பன தேசிய பாதுகாப்பு வாரம் (ஒக்ரோபர் மாத நான்காம் வாரம்) சர்வதேச பாதுகாப்பு தினம் (ஏப்ரல் 28) போன்ற நாட்களில் நடாத்தப்படுகின்றன.

வடமாகாண தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகமானது இல.133 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் 589 தொழிற்சாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 33 தொழில்சாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 20 தொழிற்சாலைகளும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 39 தொழிற்சாலைகளும், கிளிநொச்சிமாவட்டத்தில் 17 தொழிற்சாலைகளும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் ஊழியரின் பாதுகாப்பு. சுகாதாரம், சேமநலம் என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு, தொழிற்சாலைகளில் விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற ஆரோக்கியமான தொழிலாளர் வர்த்தகத்தை உருவாக்குவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச துறையினரும், தனியார் தொழில் துறையினரும் தொழில்த் திணைக்களத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

நன்றி.

க.நாகேந்திரன்,
தொழில் உத்தியோகத்தர்,
கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு,
தொழில் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

# இளைஞர் சேவை மன்ற மாவட்ட வலைப்பந்து
# கோப்பாய், தெல்லிப்பளை சம்பியன்


தெல்லிப்பளை இளைஞர் அணி


கோப்பாய் இளைஞர் அணி

(தெல்லிப்பளை)

இளைஞர் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மற்றும் கோப்பாய் பிரதேச இளைஞர் அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட இளைஞர் கழங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்கள், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச இளைஞர் அணியும், நல்லூர் பிரதேச இளைஞர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை பிரதேச இளைஞர் அணி 21:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச இளைஞர் அணியும், நல்லூர் பிரதேச இளைஞர் அணியும் மோதின. இதில் கோப்பாய் பிரதேச இளைஞர் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது. இறுதியில் கோப்பாய் இளைஞர் அணி 26:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

(93)




## காந்தி நியூஸ்ராரின் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் பிற்பகல் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அணிக்கு ஏழு பேர் கொண்ட ஆறு ஓவர்கள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கொக்குவில் ஏ.பி. அணியை எதிர்த்து கோண்டாவில் கலைவாணி அணியும், அணிக்கு 11 பேர் கொண்ட 16 ஓவர்கள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியை எதிர்த்து கொக்குவில் பிரம்படி அணியும் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரின் பிரதம விருந்தினராக லயன் என். சன்முகவேல், சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச சபைத் தவிசாள் தி. பிரகாஷ், சிறப்பு விருந்தினர்களாக சங்கீதா ஏஜென்ட் நிர்வாகி த. றூப சங்கர், காந்திரூபன் ச.ச. நிலைய நிர்வாக உறுப்பினர் தா. தவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(93)

## வென்றது யாழ். லீக் அணி

மன்னார் லீக் அணிக்கெதிரான போட்டியில் யாழ். லீக் அணி வெற்றி பெற்றது. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் அங்கத்துவக் கால்பந்தாட்ட லீக்குகளின் 40 வயதுக்கு மேற்பட்ட அணிகளுக்கிடையில் சுற்றுப்போட்டியினை தற்போது நாடளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது. நேற்று முன்தினம் மன்னார் தாளைப்பாடு விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மன்னார் மாவட்ட அணியினை எதிர்த்து யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி மோதியது.

யாழ். கால்பந்தாட்ட லீக் அணி போட்டி ஆரம்பித்த நிமிடம் முதல் மன்னார் அணிக்கு பெரும் சவாலாக இருந்தது. சீரான இடைவெளிகளில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்ட யாழ். கால்பந்தாட்ட லீக் அணி, 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## சுன்னாகத்தில் இன்று கயிறிழுத்தல்

(சுன்னாகம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினல் நடத்தப்பட்டு வரும் மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான கயிறுழுத்தல் போட்டி இன்றைய தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள பிரதேச இளைஞர் அணிகளைக் குறித்த நேரத்திற்கு வருகை தந்துப் போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

## புதிய நிர்வாகம் தெரிவு

(வவுனியா)

வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. சம்மேளத்தின் தலைவராக எஸ். ஸ்கந்தகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 22 கழகங்களைச் சேர்ந்தவரக்ள் கலந்துகொண்ட இத்தெரிவு நிகழ்வில் 2013, 2014ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக எஸ். ஸ்கந்தகுமார், செயலாளராக ரி. முகுந்தன், பொருளாளராக ஏ.ஆர்.எம். லரீஸ், உப தலைவராக எஸ். றைஸ்தீன், நாகராசா, லெனாட்பர்ணான்டோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக கே.எம். அஜித், எம். நாகராஜன், என். றிபாத், ரதீஸ்குார், எஸ். சருவான், மோகன்ராஜ், கே. கஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(160)

## மத்திய கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 50:44 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

## கிண்ணம் வென்றது நாவாந்துறை சென். மேரிஸ்





(யாழ்ப்பாணம்)

இரண்டு ஆண்டுகள் தடையினால் போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் இருந்த, நாவாந்துறை சென். மேரிஸ் கால்பந்தாட்ட அணி, வந்த வேகத்திலேயே முதல் சுற்றுப்போட்டியில் பங்குபற்றி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தேசியஇளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலா்ன கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று, யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பாஷையூர் சென். அன்டனீஸ் அணியினை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதல் சென். மேரிஸ் அணியின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்தது. இருந்தும் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றினைக் கோலாக்கிய சென். அன்ரனீஸ் அணி முன்னிலை பெற்றது.

இந்தநிலையினை நீண்ட நேரம் நீடிக்கவிடாத சென். மேரிஸ் அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு, தனது ஆதிக்கத்தினை வெளிப்படுத்தியது. முதற் பாதியாட்டத்தில் 2 : 1 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் சிறப்பாக விளையாடிய, சென். மேரிஸ் அணி, மேலும் இரண்டு கோல்களைப் போட்டு, வெற்றியினை இலகுபடுத்தியது.

இறுதியில் 4 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் பட்டத்தினைத் தட்டிச் சென்றது.



# பிள்ளை... குட்டி... கால்...



முத்தையன் என்ற ஒரு விவசாயி தனது தோட்டத்தில் உழுது கொண்டிருந்தான். மழை பெய்ததால் மண் நன்கு கிளறிவிடப்பட்டு நாற்று நடுவதற்கு பதமாக இருந்தது.

அப்போது அந்த வழியாக மூன்று பெண்கள் வந்தார்கள். அதில் ஒருத்தி இந்த மண் வளத்தைப் பார்த்து, “இந்த மண்ணுக்கு பிள்ளை வைச்சா நல்லா வரும்” என்றாள்.

இரண்டாவது ஒருத்தி, “சே...சே... குட்டி வைச்சா நல்லா வரும்” என்று சொன்னாள்!

“அட போங்கடி, இதிலே கால் வைச்சோம் என்றால் பணம் கொட்டுமடி!”

முத்தையன் ஒன்றும் புரியாமல் விழித்தான். அவனுக்கு வேலையே ஓடவில்லை. ஒருத்தி பிள்ளை வைக்கோணும் என்கிறாள், அடுத்தவள் குட்டி வைக்கோணும் என்கிறாள், மூன்றாமவள் கால் வைக்கோணும் என்கிறாள்...




பிள்ளை, குட்டி, கால் எல்லாம் கூடவா வைப்பார்கள்? சந்தேகத்தோடு வீட்டுக்கு வந்தவன் தனது தாயிடம் கேட்டான்.


“அட என் மக்குப்பிள்ளையே! நீ எல்லாம் என்னடா விவசாயி? பிள்ளை என்றால் தென்னம்பிள்ளை, குட்டி என்றால் வாழைக்குட்டி, கால் என்றால் வெற்றிலைக் கொடிக் கால் என்று அர்த்தமடா! என்னடா நீயும் உன்ர விவசாயப் படிப்பும்? போய்க் கையைக் காலைக் கழுவிவிட்டுச் சாப்பிட வாடா!” என்று விளக்கம் சொன்னாள் தாய்.



# கதைகள் நிஜமாகின்றன

ஆரம்பகாலங்களில் மின்னணு “சிப்” களைச் சிறிய விலங்குகளின் உடலுக்குள் புதைத்து அதன் மூலம் ஒட்டுக் கேட்பது போன்ற உளவு வேலைகள் செய்ய விஞ்ஞானிகள் முயன்றனர். ஆனால் அந்த விலங்குகளைத் தாங்கள் உளவு பார்க்க நினைக்கும் இடத்திற்கு போகச் செய்யுமாறு கட்டுப்படுத்த முடியவில்லை. இன்று உயிர்த் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, நரம்பியலின் வளர்ச்சி, கூடவே பரவலாக உயிரியலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மரபணுத் தகவல்களைக் கொண்டு விஞ்ஞானிகள் இந்த முடக்கத்தை மீற முயல்கிறார்கள். மரபணுப் பொறியியல் மூலமாக எலி, கரப்பன் பூச்சி, தேனீ போன்றவற்றின் மூளையில் வேறு சில மரபணுக்களைச் செலுத்தி சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமாக அவற்றை தாங்கள் விரும்பும் திசையிலும், இடத்திற்கும் நகரச் செய்து, அதை உளவு வேலைகளுக்குப் பயன்படுத்த முயற்சி செய்கிற ஆய்வுகள் நடக்கின்றன. ஆரம்ப நிலையில் இருந்தாலும், நம்ப முடியாத விஞ்ஞானப் புனைவுகள் உண்மையாகும் காலம் இது!

# குளிர்பானத்தால் வரும் கேடு



அமெரிக்காவில் குளிர்பானங்களால் ஏற்படும் ஆபத்து குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இனிப்பு கலந்த குளிர்பானங்களை அருந்துவதால் ஆண்டுதோறும் 1.8 இலட்சம் மக்கள் இறப்பதாக ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. ஆய்வுக் குழுவில் ஒருவரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கீதாஞ்சலி என்பவர் கூறுகையில், “இனிப்புப் பொருள்கள் கலந்த குளிர்பானங்களை அருந்துவதால் எடை அதிகரிக்கிறது. நீரிழிவு நோய் உள்ளிட்ட பாதிப்புகள் உருவாகின்றன. 2010ஆம் ஆண்டுக்கான ஆய்வின்படி குளிர்பானம் அருந்தும் பழக்கம் உள்ளவர்களுள் 1.3 இலட்சம் பேர் நீரிழிவு நோயாலும் 44 ஆயிரம் பேர் இதய நோய்களாலும் 6,000 பேர் புற்றுநோயாலும் இறந்தது தெரியவந்துள்ளது. குறைந்த அளவில் குளிர்பானம் அருந்தும் ஜப்பானியர்களுள் 10 இலட்சம் பேர்களுக்கு 10 பேர் மட்டுமே மரணமடைகின்றனர்” என்று அவர் தெரிவிக்கிறார்.

# புத்தர் கடலைக் கண்டதில்லை!

**- ரோகிணி -**

கௌதம சித்தார்த்தர் தன் முப்பத்தைந்தாவது வயதில் போதி என்னும் ஞானத்தை ஒரு மரத்தடியில் பெற்றார். எனவே அந்த மரம் போதிமரம் என்று பெயர் பெற்றது. அதுதான் தமிழில் அரச மரம். புத்த சமயம் பரப்ப வந்த துறவிகள் போதி மரத்தையும் கொண்டு வந்தார்கள். போதி மரம் அரச மரமாகிவிட்டது. அதாவது மரங்களுக்குள் அரசன் அரசமரம்.

ஞானம் பெற்ற பின்னர் கௌதம சித்தார்த்தர் தன்னை “ததாகதர்” என்று அழைத்துக் கொண்டார். அது பாலி மொழி சொல். அதற்குப் பூரண ஞானம் பெற்றவர் என்பது பொருள். ஞானம் பெற்ற பின்னர் தான் பெற்ற ஞானத்தை யாருக்கு உபதேசிப்பது என்று யோசித்தார். வாரணாசிக்கு அருகில் சாரநாத் என்னும் இடத்தில் இசிபட்னாவில் மான் சோலையில் தான் விட்டு விட்டு வந்தவர்களுக்கு ஞான உபதேசம் செய்யலாம் என்று முடிவு செய்தார். ஆனால் அவர்கள் முதலில் புத்தரை ஞானம் பெற்றவர் என்று நம்பவில்லை. ஆனால் விரைவிலேயே அவரது உபதேசத்தை கேட்கலானார்கள்.

”மனிதர்களுக்கு ஒளி தரும் ஒரே கருவி அவர்கள் மனம் மட்டுமே“ என்றார். புத்தரின் முதல் உபதேசமே அதுதான். அவரின் முதல் பேருரை தர்ம சக்கரத்தை உருட்டியது என்று சொல்லப்படுகிறது. அவர் குதிரை மீதேறி கானகம் வந்தார். ஐந்தாண்டுகள் அலைந்து திரிந்து ஞானம் பெற்றார். ஞானத்திற்காக அவர் அலைந்த காலத்திலோ, ஞானம் பெற்ற பின்னர் உயிர் வாழ்ந்த நாற்பத்தைந்தாண்டு காலத்திலோ அவர் குதிரை, யானை மீது ஏறியது இல்லை. பல்லக்கில் அமர்ந்தது கிடையாது. வண்டியில் பயணப்பட்டதும் இல்லை. புத்தர் தன் வாழ்நாளில் கடலையே கண்டது இல்லை. அவருக்கு மனக்கடல்தான் தெரியும். தண்ணீர் நிறைந்த கடலை அவர் பார்த்ததே இல்லை. ஆனால் பொங்கும் மனக்கடலை அடக்கவே அவர் வழிகாட்டி வந்தார்.

புத்தர் கோடை காலத்தில் கால்நடையாகவே நடந்து நடந்து சென்று மகத மன்னன் பிம்பிசாரன், அவன் மகன் அஜாதசத்ரு, பெற்றெடுத்த தந்தை சுத்தோதனர், வளர்த்த சிற்றன்னை பிரஜாபதி கௌதமி, மனைவி யசோதரா, தம்பி நந்தன், மகன் ராகுலன், சிற்றப்பா மகன் ஆனந்தன், கொலைகாரன் அங்குலி மாலன், சண்டாளிகா பிராக்ரதி, நாவிதன் உபாலி எல்லாம் புத்தரிடம் உபதேசம் பெற்றவர்கள்தான். ஆனால் கடைசிவரையில் யார் யாரெல்லாம் “சீலத்தோடு வாழ்ந்து ஞானம் பெற்றார்கள் என்பது குறித்து புத்தர் கணக்கெடுப்பு ஏதும் செய்யவில்லை. உபதேசம் மட்டும்தான் அவர் கடமையாக இருந்தது.

புத்தர் வாழ்க்கையில் குறைவாக வருகிறவன் அவர் மகன் ராகுலன்தான். மூன்றோ நான்கோ இடத்தில்தான் அவன் வருகிறான். புத்தர் கடுமையான மொழிகள் பேசியது என்றால் அது அவனிடம்தான்.

அவர் எப்போதும் இனிமை யான சொற்களையே பேசினார். சொல்லாலும், செயலாலும் யாரையும் காயப்படுத்திவிடக்கூடாது என்பது அவர் வாழ்க்கை முறையாக இருந்தது. அவர் மக்களின் நேசராக இருந்தார். அறிவுக்கு எட்டாத எதன் மீதும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. மக்களுக்காகவே அவர் பேசினார். அவர் பேசிய மொழிய மாகதி மொழி. அதாவது மகத நாட்டு மக்கள் பேசி வந்த மொழி. அதற்கு எழுத்துக்கள் இல்லை. அதுமட்டுமல்ல. அவர் காலத்தில் பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் என எந்த மொழியும் எழுத்து மொழியாக இல்லை. எல்லாம் பேச்சு மொழியாகவே இருந்தன. புத்தர் தன் காலத்தில் எதையும் எழுதவில்லை.



புத்தர் பரிநிர்வாணம் அடைந்த பின்னர் துயருற்ற சீடர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி என்ன செய்வது என்று ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுபத்ரன் என்ற சீடன் “அவர் பரிநிர்வாணம் அடைந்தது நல்லதுதான்”. ஒவ்வொருவரையும் நீங்கள் இன்னது செய்ய வேண்டும் இன்னது செய்யக்கூடாது என்று தடுத்து வந்தார். அந்தத் தடையில்லாது போய்விட்டது. நாம் சுதந்திரமாகச் செயல்படலாம்” என்றான்.

தர்ம உபதேசத்தை ஒழுங்குபடுத்தி வைக்காவிட்டால் அவர் என்ன உபதேசம் புரிந்தார் என்பதே தெரியாமல் போய்விடும் என்று பயந்தார்கள். எனவே புத்தர் கூறியவற்றையும், அவர் செயல்பாடுகளையும் தொகுத்து வைப்பதென முடிவு செய்தார்கள். புத்தரின் நிழல்போல கூடவே இருந்த ஆனந்தனிடம் சுத்தபிடகம், அபிதம்ம பிடகம் இரண்டையும் தொகுக்கச் சொன்னார்கள். அதில்தான் புத்தரின் நேரடி யான உபதேசமாகிய தம்ம பதம் வருகிறது. உபாலியிடம் விநயபிடகத்தைத் தொகுக்கச் சொன்னார்கள். பின்னர் ராஜகிருகத்தில் ஐநூறு பிட்சுக்கள் கூடினார்கள். அதுதான் பௌத்த முதல் மாநாடு. அதில் ஆனந்தன், உபாலி தொகுப்புக்கள் ஒப்பிக்கப்பட்டன. சில திருத்தங்கள் சொல்லப்பட்டன. புத்தர் சொன்னதற்கு முரணில்லாத வகையில் இருக்கிறது என்பது உறுதி யான பிறகு அவை அங்கீ காரம் பெற்றன. அதனையே வழிகாட்டியாக பிட்சுகள் ஓதி வந்தார்கள். அசோகன் காலத்தில் பாலி மொழியில் எழுதப்பட்டன. எனவேதான் பௌத்த சமய நூல்களுக் கான மொழியாக பாலி இருந்து வருகிறது.

புத்தர் பரிநிர்வாணம் அடைந்த இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு அசோகன் பௌத்த சமயத்தில் சேர்ந்தான். புத்தரின் தர்ம உபதேசத்தைப் பரப்புவதை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தான். புத்தர் பிறந்த கபிலவஸ்து, ஞானம் பெற்ற புத்த காயா, உபதேசம் புரிந்த சாரநாத், ராஜகிருகம், பரிநிர்வாணம் அடைந்த குசிநரா - என்று முக்கிய மான இடங்களில் எல்லாம் தூபிகள் அமைத்தான். அவரின் உபதேசங்களைப் பொறித்து வைத்தான். அவை பாலி, பிராகிருதம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் உள்ளன.

அசோகன் தன் கல்வெட்டுக்களில் தன்னை தேவனாம்பிரியன் பிரியதர்ஷன், தர்மராஜா என்று அழைத்துக் கொள்கிறான். பௌத்த சமயத்திற்கென ஒரே ஒரு காப்பியம்தான் இருக்கிறது. அது தமிழில் எழுதப்பட்ட மணிமேகலை. எழுதியவர் மதுரை கூலவணிகன் சீத்தலைசாத்தனார்.

# காற்றுக்கு வேலி இல்லை 3

சார்லஸ்

நாடின் லபாகி நடித்து இயக்கியிருக்கும் "where do we go now?" என்ற படம் இந்த balancing வித்தையை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது. லெபனான் நாட்டின் ஒரு கிராமத்தில் இஸ்லாமியர் களும் கிறிஸ்தவர்களும் சரிசமமாக வாழ்கிறார்கள். நாட்டில் மதக் கலவரங்கள் நிகழும்போதெல்லாம் இந்த கிராமத்து ஆண்கள் மோதிக்கொண்டு பல உயிர்ச்சேதங்களை நிகழ்த்திவிடுவது வழக்கம். கலவரம் இல்லாத நாட்களில் அவர்களுக்குள் இணக்கமும் நட்பும் நிலவத்தான் செய்கிறது. ஆனால் கலவரம் வந்துவிட்டால் ஆண்களுக்கு வெறிபிடித்துவிடும். ஒருசமயம் நாடெங்கும் மதக் கலவரங்கள் பரவ ஆரம்பித்திருப்பதாக அந்தக் கிராமத்துப் பெண்களுக்குத் தெரியவருகிறது. இதை எப்படியாவது ஆண்களுக்குத் தெரியாமல் மறைத்து, தங்கள் ஊரில் கலவரம் நடக்காமல் தடுப்பதற்காகப் பெண்கள் பலவிதமான முயற்சி களை மேற்கொள்கிறார்கள். இதுதான் கதை. மிகுந்த நகைச்சுவையோடும், உணர்ச்சிகரம் கலந்தும் திரைக்கதை வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இப்படம் இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்க ளையும் ஒன்றாகவே கேலிசெய்கிறது. எந்த மதத்து ஆணாயிருந்தாலும் அவனது பலவீனம் ஒரே மாதிரியானதுதான் என்று காட்டுகிறது. ஆண்களின் வன்முறைக் குணத்தை இந்த மதங்களால் மாற்ற முடியவில்லை என்று காட்டுகிறது. மத அடை யாளங்களை அவமதிக்கும் காட்சிகளும் படத்தில் உண்டு. ஒரு காட்சியில், கிறிஸ்தவ தேவாலயத்தின் மாதா சிலையில் இரத்தக் கண்ணீர் வருவதுபோல் செட்அப் செய்து, ஒரு பெண்மணி மாதா தன்னிடம் பேசினார் என்று பொய்சொல்லி கெட்ட வார்த்தை களால் மிரட்டுகிறாள். இன்னொரு காட்சியில், ஒரு பெண்மணி மாதாவின் முகத்தில் மண்ணை வீசி துப்பித் திட்டுகிறாள். ஒருமுறை மசூதிக்குள் ஆடுகள் நுழைந்துவிடுகின்றன. அவை மைக்கில் கத்த, வழக்கமாகப் பாங்கு ஒலிக்கும் ஒலிபெருக்கிக் குழாய்களில் "மே மே" என்று சத்தம் எழுகிறது. நம் நாட்டில் இந்தக் காட்சிகள் தணிக்கையில் தப்புவது கடினம், அப்படியே தப்பினாலும் அரசியலில் ஈடுபட்டிருக்கும் மதவாதிகள் புகுந்து படத்தைக் கூறு போட்டிருப்பார்கள்.

படம் முழுக்க முழுக்க மதங்களுக்கு எதிரான-தாகவும் ஆண்களுக்கு எதிரானதாகவும் இருக்கிறது. ஆனால் இயக்குனர் நாடின் மிகப் பிரமாதமான balancing act ஒன்றை நிகழ்த்திக் காட்டுகிறார். அந்த




ஊரில் ஒரேயொரு கிறிஸ்தவப் பாதிரியாரும், ஒரேயொரு இஸ்லாமிய மதபோதகரும் மட்டும்தான் இருக்கிறார்கள். அவர்கள் இருவருமே தங்கள் மதங்களில் உள்ள மெய்ஞானத்தில் மட்டுமே நாட்டம் கொண்டவர்களாகவும், மத அரசியலை, மோதலை வெறுப்பவர்களாகவும் இருக்கிறார்கள். பழுத்த பழங்களாக இருக்கும் அந்தப் பெரியவர்கள் தங்களுக்குள் புரிதலோடும் நல்லிணக்கத்தோடுமே இருக்கிறார்கள். இதன்மூலம் இயக்குனர், மிகத் தெளிவாகவே, இரு மதங்களின் இறையியல் தத்துவங்களும் அடிப்படையில் அன்பையே போதிக்கின்றன, அவை மதவெறியை ஆதரிப்பதில்லை என்று காட்டிவிடுகிறார்.

மனிதகுலம் நாகரீகத்தை நோக்கி நகர்ந்த ஆதிநாட்களில் தனித்தனிக் குழுக்களாகத்தான் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் தனித்துவமான சில பழக்க வழக்கங்களும் சடங்குகளும் இருந்திருக்கும். அதனால் மற்றக் குழுக்களோடு அவர்கள் முரண்பட்டிருப்பார்கள். அந்த விலகலும், பிழைப்புக்கான போட்டியும் சேர்ந்து, தீராத பகையாக மாறியிருக்கும். அந்த இனக்குழு மோதல்களின் தொடர்ச்சிதானே இன்றைய உலக அரசியல் என்பதும்? இப்போதிருக்கும் இனவாதிகளும், மதவாதிகளும் பழங்குடி மனப்பான்மையிலிருந்து எந்த அளவு மாறியிருக்கிறார்கள்?

ஆனால் ஒட்டுமொத்தமாக மனிதகுலம் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் நோக்கித்தான் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் அறியலாம். வரலாற்றின் எந்த ஒரு காலகட்டத்தை எடுத்துப் பார்த்தாலும், அதற்கு முந்தைய காலத்தைவிட, அப்போதைய காலகட்டத்தில், உலக மக்களுக்கிடையேயான தொடர்பும் இணக்கமும் கூடியிருந்திருப்பதைக் காணலாம். நம் காலத்தில் முன்னெப்போதையும் விட உலக மக்கள் நெருங்கியிருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். மனித குலம் தன்னைத்தானே இணைத்துக் கட்டிக்கொள்வதற்காகத்தான் இணையம் முதலான தொடர்புவசதிகளை உண்டாக்கியிருக்கிறது என்று தோன்றுகிறது. இந்த நெருக்கத்தை, உலகங்களுக்கு இடையேயான இணைப்பை எப்போதும் கனவுகண்டவர்கள் கலைஞர்கள்தான். இசை, நடனம், ஓவியம், சிற்பம், கதைகள், கவிதைகள் என்று எல்லாவற்றின் மூலமும் வேற்று மனிதர்களுக்குள் முதல் இணைப்பை, முதல் புன்னகையை, முதல் கைகுலுக்களை உண்டாக்கியவர்கள் கலைஞர்கள். மனிதர்களைப் பிரிப்பதை அல்ல இணைப்பதற்கே நல்ல கலை முயல்கிறது. இதுதான் கலையின் அரசியல்.

(தொடரும்)

# மூன்றாம் பால்



ஒரு அரவாணி உருவாவது என்பது பற்றிய விஞ்ஞானத் தகவல்கள் பல புதிர்களைக் கட்டவிழ்க்கின்றன. மகாராசன் தொகுத்த "அரவாணிகள்" என்னும் மற்றும் ஒரு முக்கிய ஆவணமான நூலில் டாக்டர் சாலினி நமக்குப் புதிய பல தகவல்களைச் சொல்கிறார். இந்தப் பூலோகத்தில் பிறக்கும் எல்லா ஜீவராசியும் "ஜனிக்கும்" அந்தக் கணத்தில் பெண் பாலாய்த்தான் ஜனிக்கிறது. அந்த உயிர்க்கரு பெண்ணாகவே இருக்கிறது. அந்தக் கருவின் உடம்பில் ஒற்றை Y குரோமோசோம் வீற்றிருந்தால், அது கருவான ஆறாம் வாரத்தில் டெஸ்டோஸ்டீரோன் எனும் ஹோர்மோனை உற்பத்தி செய்கிறது. அந்த டெஸ்டோஸ்டீரோன் என்ற ஹோர்மோன் அந்தக் கருவின் உடம்பு முழுக்கப் பரவி எல்லா செல்களையும் "ஆண்மைப்படுத்தி" விடுகிறது. ஆறு வாரம் வளர முலைகள், மூளை நரம்புகள், கர்ப்பப்பையாக பிறகு வளரப்போகும் முலேரியன் குழாய்கள் என்று முழுவதுமாக பெண்பாலாய் இருந்த அந்த சிசு, டெஸ்டோஸ்டீரோனின் உபயத்தால் மெல்ல மெல்ல மாறுகிறது. அதன் இனப்பெருக்க உறுப்புகள் ஆண்மைப்படுத்தப்படுவதால் விரைப்புறுப்பு, விந்தகம் மாதிரி யான புதுப்புது உறுப்புகள் உருவாகின்றன. அதேபோல, சிசுவின் மூளை நரம்புகளும் மாற்றி அமைக்கப்படுவதால் "ஆண்" என்கிற உடல் உருவம் மூளையில் பதிகிறது. இதனை "பாடி இமேஜ்" என்கிறோம். நம் எல்லோரின் மூளையிலும் நமது ஒவ்வொரு புற உறுப்பிற்கான உருவகமும் பதிந்திருக்கிறது.

"நான் ஆம்பிளையாக்கும்" என்று மீசை முறுக்கும் சண்டியர்கள் எல்லோருமே முதல் ஆறு வாரங்கள் பெண்ணாக இருந்து, "பெண்மயம்" கருணையினால் ஆண்களாகப் பிழைத்தவர்கள்தான் என்பதை அறியும் போது மகிழ்ச்சி தோன்றுகிறது. அதோடு, மரபணுக்கள் கர்ப்பப்பைக்குள் செய்த யுத்தமும் மூன்றாம் பால் தோன்றக் காரணமாகிறது என்பது விஞ்ஞானம். இதற்கு அப்பன்மார்களும் அண்ணன்மார்களும் குதிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

('தாழப் பறந்த பரத்தையர் கொடி' நூலில் பிரபஞ்சன்)

# தங்கம் தங்கமே!

- குலம் -



உலக சந்தையில் தங்கத்தின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளமையினால் தங்க விற்பனையாளர்களிடம் சோகமும் நுகர்வோரிடையே மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

தங்கத்தின் விலைக்குறைவை எதிர்பார்த்திராத தங்க நகை விற்பனையாளர்கள் மிகவும் அதிர்ந்து போய் உள்ளார்கள். ஐம்பத்தையாயிரம் ரூபா வரை விற்ற இருபத்திரண்டு கரட் பவுண் திடீரென்று நாற்பத்தெட்டாயிரம் ரூபாவுக்கு இறங்கியது. இது இன்னும் குறைவடையக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதினால் தங்கத்தைக் கூடிய விலையில் கொள்வனவு செய்த நகை விற்பனையாளர்கள் செய்வதறியாது கலவரமடைந்துள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடி காரணமாக சைப்பிரஸ் போன்ற சில நாடுகள் சர்வதேச சந்தையில் தம்மிடமிருந்த தங்கத்தை விற்பனை செய்வதற்கு முன்வந்தமையே தங்கத்தின் விலை திடீரென சரிவடைந்ததற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. சைப்பிரஸ் போலவே மேலும் சில நாடுகள் பொருளாதார நெருக்கடியில் காணப்படுவதினால் அவைகளும் தம்மிடமிருக்கும் தங்கத்தை விற்பனை செய்வதற்கு முற்பட்டால் தங்கம் உலகச் சந்தையில் மேலும் விலை குறைவடையும் வாய்ப்புள்ளது.

இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் மற்றும் பல பாகங்களிலும் செறிந்து வாழும் தமிழ் மக்களே தங்கத்தை அதிகம் பாவிப்பவர்களாக உள்ளார்கள். சில தமிழ் மாப்பிள்ளைகள் தம் மனைவியருக்கு முப்பத்தொன்று, முப்பத்துமூன்று பவுண்களில் ஒற்றை இலக்கங்களில் தாலிக்கொடி கட்டியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. கூடிய பவுணில் தாலிக்கொடி கட்டுவதை மாப்பிள்ளை பகுதியும், பெண் வீட்டாரும் பெருமையாகக் கருதுவதே இதற்குக் காரணம்.

என்னதான் பவுண் விலை கூடினாலும், குறைந்தாலும் பெண்ணுக்கான நகைகளை வாங்க வேண்டிய அவசியம் பெண் வீட்டாருக்கு இருப்பதுபோல், தாலிக்கொடி செய்யவேண்டிய தலையாய பொறுப்பு மாப்பிள்ளை வீட்டாருக்கு உண்டு. சிங்கப்பூர் பவுணில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு விருப்பம் மிக அதிகம். காரணம் அது ஜொலிக்கும் தன்மையில் முதன்மை வகிப்பதும் கலப்படம் குறைவாக இருப்பதுமாகும்.

தங்கம் விலை கூடியிருந்த வேளையில் வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதியும் அதிகரித்திருந்தது. தற்போது தங்கத்தின் விலையில் சரிவு ஏற்பட்டமையினால் நாணயத்தின் மதிப்பும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நகைக் கடைகளில் இன்று தங்கத்தின் மதிப்பு நாற்பத்தெட்டாயிரம் ரூபா என நகைக்கடை வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ஐநூறு அல்லது ஆயிரம் ரூபா விலை வித்தியாசம் இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்பு நீண்டகாலம் ஒரு பவுண். பத்து ரூபாவாகவே இருந்தது. இதனாலேயே எமது முன்னோர்கள் பத்து ரூபா பணத்தை ஒரு பவுண் என்றே சொல்லிவந்தனர். இப்படிப் பத்து ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு பவுண் ஐம்பத்தையாயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டுத் தற்போது நாற்பத்தெட்டாயிரம் ரூபாவாகக் குறைந்துள்ளது.

பல அரசாங்கங்களும் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்திற்காக தங்கத்தைச் சேமித்து வைத்திருப்பது வழமை. அப்படி சேமித்து வைத்த தங்கத்தையே பொருளாதார நெருக்கடியின் போது விற்பனை செய்ய முன்வருகின்றன. வடகொரிய யுத்தம் ஆரம்பமானால் தங்கத்தின் விலை மீண்டும் உயர்வடையலாம் என்னும் எதிர்பார்ப்பில் சிலர் விலை சரிந்திருக்கும் இப்போது அதனைப் பெரும-ளவில் கொள்வனவு செய்துவைக்கத் தயாராகிறார்கள். எப்போதும் தங்கம் மக்களிடையே மதிப்புக்குரிய பொருளாகக் காணப்படுவதுதான் இதற்குக் காரணம். தங்கம் என்றும் தங்கமேதான்.


# QWERTY கீபோர்ட் உடைய Nokia செல்பேசிகள் அறிமுகம்!



நோக்கியா நிறுவனமானது QWERTY கீபோர்ட் உடைய Nokia Asha 210 எனும் புதிய ஸ்மார்ட் கைப் பேசி ஒன்றினை அறிமுகப்படுத்துவது தொடர்பான அறிவித்தலை வெளியிட் டுள்ளது. 2.4 அளவு, 320 x 240 Pixel Resolution உடைய LCD திரை யினைக் கொண்டுள்ள இக்கைப்பேசி யானது 2 மெகாபிக்சல்கள் உடைய கமரா, 64MB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றினையும் கொண்டுள்ளது டன், இச்சேமிப்பு நினைவகமானது microSD கார்ட்களின் உதவியுடன் 32GB வரை அதிகரிக்கக்கூடியதாக வும் அமைந்துள்ளது.


இக்கைப்பேசிகள் தனியான சிம் மற்றும் இரண்டு சிம்களை இணைத்து பயன்படுத்தக்கூடிய இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளதுடன் இவற்றில் USB இணைப்பான் மற்றும் WiFi வயர்லெஸ் தொழில்நுட்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் இரண்டாவது காலாண் டுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இவற்றின் அறிமுக விலையானது 72 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பார்வையற்றவர்களுக்கான ஸ்மார்ட் தொலைபேசி!



பார்வையற்றோருக்கு உதவும் விதத்தில், பிரைய்லி முறையைப் பயன்படுத்தி, ஒரு ஸ்மார்ட்போன், இந்தியாவில் தயாரிக்கப் பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் உள்ள இந் தியத் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், பணிபுரியும் தாகர், இந்தப் புதிய போனை வடி வமைத்துள்ளார். தற் போது சோதனை முயற்சிக்கு உள்ளாக் கப்பட்டிருக்கும் இந்த போன், வெற்றி பெற்றால், பார்வை யற்றோருக்கு இது பெரி தும் உறுதுணையாக இருக்கும் என்று தாகர் குறிப்பிட்டார்.

# ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள்!




தொடுதிரை தொழில்நுட்பத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் அப் பிள் நிறுவனம் மற்றும் சம்சுங் நிறுவனம் என்பன ஏற் கனவே ஈடுபட்டுள்ள நேரத்தில் சற்றுத் தாமதமாக மைக் ரோசொப்ட் நிறுவனமும் களத்தில் குதித்துள்ளது. விண் டோஸ் 8 இயங்குதளத்தினைக் கொண்டதும் 1.5 அங்குல அளவுடைய தொடுதிரையினை உள்ளடக்கியதுமான ஸ்மார்ட் கடிகாரத்தை உருவாக்குவதில் மைக்ரோசொப்ட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இக்கைக் கடிகாரமானது சிறிய கணனி ஒன்றினைப் போல செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆபாச தகவல் வராமல் Lock செய்யலாம்...

நாம் வீட்டில் இல்லாத போது குழந்தைகள் ஆபாச தளங்கள் பார்க்காமல் இருக்க சிறந்த வசதியை google வழங்குகிறது அது எப்படி என்று பார்க்கலாம்.

முதலில் கூகிள் தளம் சென்று உங்கள் User name, password கொடுத்து Login செய்யுங் கள்.

பிறகு settings தேர்வு செய்து search settings click செய்யுங்கள்.

Safe search Filtering சென்று உங்களுக்கு தேவையானவாறு நிறுவுங்கள்,

அடுத்து Safe Search Filtering கீழே உள்ள Lock safe search கிளிக் செய்துகொள்ளுங்கள்.

Locking Process நடைபெறும்.

பிறகு Safe search Locked என்று தோன்றும் சரியாக Lock ஆகாவிட்டால் மீண்டும் ஒரு முறை சென்று Lock safe search கொடுங்கள்.

அவ்வளவுதான் இனி ஆபாசம் சம்பந்தமான எந்தப் தகவலும் உங்கள் குழந்தைகளுக்கு Google வழங்காது.


இதன் பிறகு google search பக்கத்தில் நீங்கள் Lock செய்தால் வண்ணப் பந்துகள் அடையாளமாகத் தோன்றும் .

நீங்கள் இதனை Unlock செய்ய மீண்டும் Search setting சென்று unlock என்று மாற்றிவிடுங்கள்.

Google images





# மின்சாரம், குடிநீர் குளிர் காற்று - சோலர்!



இப்போது ஐபிஎம் ஒரு புது வகை. சோலார் டெக்னோலஜியை கண்டுபிடித்துள்ளது. இதற்குப் பெயர் High Concentration PhotoVoltaic Thermal (HCPVT) இதன் மூலம் ஒரு சென்ரி மீற்றர் சிப்பில் 2000 மடங்கு சூரிய சக்தி கிடைக்கும் அளவுக்கு மிகவும் எளிதான சில மெட்டல்கள் மூலம் அமைத்துள்ளனர்.

இதில் 30% சூரிய சக்தியை மின்சாரமாக மாற்றியும் மீதி உள்ள சூட்டில் உப்புத் தண்ணீரை சேலினேட் முறையில் நல்ல தண்ணீராக மாற்றியும் பின்னரும் மிச்சம் உள்ள எனர்ஜியில் குளிர்ந்த காற்றுக்கிடைக்குமாறு 3 இன் 1 ஆக அமைத்திருக்கிறார்கள். அதாவது ஒரு முழு சோலர் / போட்டோவால்டிக் பிளேட் மூலம் 300 வாட்ஸ் கிடைக்கும் ஆனால் இங்கு 1 சென்ரி மீற்றரில் 200 முதல் 250 வாட்ஸ் மின்சாரம் கிடைக்கும். ஒரு இரண்டடிக்கு இரண்டு இருந்தால் முழு வீட்டுக்கு 8 மணி நேர சூரிய சக்தியில் 24 மணி நேரமும் கிடைக்கும் என்றால் பெரிய கண்டுபிடிப்பு தான். அதாவது ஒரு ஊருக்கே ஒரு டிஷ் போதும். இவர்களிடம் சஹாரா பாலைவனத்தில் 2% சதவிகித இடம் கொடுத்தால் உலகத்தின் மொத்த மின்சார தேவையும் எந்த ஒரு எனர்ஜி இல்லாமல் 100% கிடைக்குமாம். இதை அமைக்க வெறும் 31,500 ரூபாதான் ஒரு சதுரமீற்றருக்கு ஆகும் செலவு அது போக 1000 யூனிட் மின்சாரத்துக்கு வெறும் 5 ரூபாய் தான் செலவு.கூடவே தண்ணீர் பஞ்சம் மற்றும் இயற்கை ஏசி வேறு!

# நம் உடலைப் பற்றிய வியத்தகு உண்மைகள்



குழந்தை பிறக்கும் பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். ஆனால் வளர்ந்து பெரிய வனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும்.

• நமது உடல் எடை யில் 14% எலும்பு களால் ஆனது.

• நமது உடலில் உ்று தியான எலும்பு தொடை எலும்பு, அது கொன் கிரீட்டை விட வலிமையா னது.

• நமது உடல் எடை யில் 7% இரத்தம் ஆகும். தினந்தோறும் 450 கலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப்படுத்தப்படுகிறது.

• பெண்களுக்கு சரா சரியாக 4.5 லீற்றர் இரத் தம், ஆண்களுக்கு சரா சரியாக 5.6 லீற்றர் இரத் தம் இருக்கும். நமது உட லில் உள்ள இரத்த சிவப்ப ணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள், அதுபோல் ஒவ்வொரு நொடியில் சுமார் இரண்டு மில்லியன் இரத்த சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின் றன.

• நமது உடலில் உள்ள இரத்தக் குழாய் களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்த தொலைவில் நாம் இரண்டு முறை உல கத்தை சுற்றி வந்துவிடலாம்.

• நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம்.

• நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளை பிரித்தறியும் சக்தியுண்டு.

• நமது கண்களில் உள்ள கருவிழி மட்டும் தான் இரத்த நாளம் இல்லாத உயிருள்ள திசு.

• முதல் 8 வாரம் வரை குழந்தைகளின் கண களில் கண்ணீர் வராது.

• மனித இதயம் சராசரியாக ஒரு வருடத் திற்கு 35 மில்லியன் முறை துடிக்கிறது.

• ஒரு சராசரி வாழ்வில் இதயமானது 2.5 பில்லி யன் முறை துடித்து 1 மில்லியன் பரல் இரத் தத்தை இரத்த குழாயில் செலுத்துகிறது.

• இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடிவரை பீய்ச்சி அடிக்கும் சக்தி கொண்டது.

• மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்பு செல்கள் உள்ளன.

• ஒரு மனிதன் 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக் கின்றன.

• நாம் சுவாசிக்கும் மொத்த ஒட்சிசனில் 20% மூளைக்குச் செல்கிறது.

• நமது மூளை 80% நீரால் ஆனது.

• நமது மூளையின் செயற்திறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

• நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான்.

• மனித தலையில் சராசரியாக 100,000 தலைமுடிகள் இருக்கும்.

• பெண்கள் கருத்தரிக்கும் பொழுது, கர்ப்பப் பையானது, அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகிறது.

• மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான வேலைகளை செய்கிறது.

• மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

| | |
|---|---|
| கண்கள் | 31 நிமிடங்கள் |
| மூளை | 10 நிமிடங்கள் |
| கால்கள் | 4 மணி நேரம் |
| தசைகள் | 5 நாட்கள் |
| இதயம் | சில நிமிடங்கள் |

# கிராம அலுவலர் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

## - வளலாய் மக்கள் தெரிவிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் ஜே.284 கிராம அலுவலர் பணிமனைக்கு நிரந்தர கட்டடம் இல்லாது பல இடங்களில் மாறி மாறி இயங்கி வருவதால் இக்கிராம மக்கள் இதனூடான சேவைகளைப் பெறுவதற்கு அலைந்து திரிய வேண்டிய நிலை காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலகம் நிரந்தரக் கட்டடமில்லாது சிறிது நாட்களுக்கு ஓரிடத்திலும் சிறிது நாட்கள் வேறொரு இடத்திலும் மாறி மாறி இயங்குவதால் கிராம மக்கள் ஒவ்வொரு இடத்திற்கும் மாறி மாறிச செல்லவேண்டியுள்ளதாகவும் இதனால் தமது தேவைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களும் நிகழ்வதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிராமத்தில் இயங்கும் கிராம அலுவலகம் மிக முக்கியமானதாகும். விண்ணப்பங்களுக்கு கையொப்பம் பெறுதல், நிவாரண உதவிகள் பெறுதல் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி கிராம அலுவலரின் மூலமாகவே செயற்படுத்தப்பட வேண்டிய நிலையில் கிராம அலுவலகம் இடம்மாறுவதால் இவற்றை செயற்படுத்துவதற்கு தாம் நாளாந்தம் அங்கு செல்லவேண்டியுள்ளதாகவும், அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராம மக்கள் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக இக் கிராம அலுவலர் பணிமனையினை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஒரே இடத்தில் இயங்க வைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வீதி அகலிப்புப் பணிகளுக்காக மின்விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று ஞாயிற்றுக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் மல்லாகம் ஒரு பகுதி, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், விளான், அம்பனை, வித்தகபுரம், ஏழாலைப் பிரதேசம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், கல்வியன்காடுப் பிரதேசம், நல்லூர், அரியாலை, செம்மணி, பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை திங்கட்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் தர்மக்கேணிப் பிரதேசம் (பளை) ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் சங்கரத்தை, அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு. பொலிஸ நிலையப் பகுதி, நெல்லியடியின் ஒரு பகுதி, வதிரிப் பிரதேசம், அல்வாய் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம் ஆகிய இடங்களிலும்,

2ஆம் திகதி வியாழக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு. பொலிஸ் நிலையப் பகுதி, நெல்லியடியின் ஒரு பகுதி, கரவெட்டிப் பிரதேசம், யாக்கருப் பிரதேசம், கிழவிதோட்டம், துன்னாலையின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு

**ஆக்கம்**

ச.சாருண்யா (கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை), ல.நிரோஜன் (வரணி வடக்கு அ.த.க. பாடசாலை), பா.கோபிகா (மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை)

**கட்டுரைவரைதல் பிரிவு 1**

க.கலீனா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ப.சுகிர்தன் (மந்துவில் ஸ்ரீ பாரதிவித்தியாலயம்), யோ.வைஸ்ணவி (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்)

**பிரிவு 2**

ஸ்ரீ.வினுஜா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), அனற்சுதர்ஜிகா (மிருசுவில் றோ. க.த.க. பாடசாலை), ச.கிறிஸ்துஜா (சாவகச்சேரி றிபேக் கல்லூரி)

**கட்டுரைவரைதலும்,**

**இலக்கியம் நயத்த லும்**

லே.கோகிலன் (வரணிமகாவித்தி) சி.சோபனா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி),க.கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**கட்டுரை வரைதலும்**

**இலக்கியம் நயத்த லும்**

ப.சுஜீபன் (வரணிமகாவித்தியாலயம்), வி.திலக்ஷி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), செ. கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி),

**இலக்கணப்போட்டி பிரிவு 1**

கு.கௌசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தி.கிருஷாந்தி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சு.துர்க்கா (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்) தொடரும்...) (11)



தெல்லிப்பழை, தருவம்பானை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கடந்த திங்கட்கிழமை 9ஆம் திருவிழாவில் உபயகாரர் கமலதாசனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான தவில்,நாதஸ்வரக் குழுவினரின் தவில் - நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறுவதைக் காணலாம். (படம் கௌதமன்)

# பதிவிறக்கப் பெட்டகம்

“பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்” என்று ஔவையாரில் பாடுகிறார் கே.பி. சுந்தராம்பாள். இதுவே பெரும்பாலான திரைப்படங்கள் பெண்களுக்கு வகுத்துக் கொடுத்த நெறி. அயோக்கியத்தனமாய் கொடுமை செய்கிற கணவனைப் பார்த்து, ஒவ்வொரு திரைப்பட மனைவிகளும் “அத்தான் என்னை அடியுங்க கொல்லுங்க. ஆனா வீட்டை விட்டுப் போகச் சொல்லாதீங்க. இந்த வீட்டிலே என்னை ஒரு வேலைக்காரியாயிருந்து உங்களுக்கு பாத சேவை செய்ய அனுமதி மட்டும் கொடுங்க” என்று கெஞ்சிக கெஞ்சி அழுதார்கள். **– அசோகமித்திரன்**

சினிமா உலகில் ஒரு பெண்ணானவள் அழகுக்கும் கவர்சசிக்கும் மட்டும்தானா தேவைப்படுகிறாள்? இது ஒரு விதத்தில் பெண்ணுக்கு இழைக்கப்படுகிற அவமரியாதைதான். சினிமாவுக்குரிய முகம், சினிமாவுக்குரிய உடல்கட்டு கேப்பதெல்லாம் மோசமான வியாபார பேரம் போல எனக்குத் தெரிகிறது. பெண்ணுடைய அழகை மட்டும் வைத்துச் செய்யப்படுகிற இந்த மோசமான வியாபாரத்தை ஒரு அவமானமாகவே நான் கருதுகின்றேன். இதை உடைத்தெறிய வேண்டும் என்ற ஆவேசம் என் மனதில் உருவானபோதுதான் பெண் அடிமைத்தனத்தின் கோரமான போக்கினை நான் அப்பட்டமாக உணரத் தலைப்பட்டேன். அதுவும் ஆண்மேலாதிக்கம் மேலோங்கி நிற்கிற சினிமாத் துறையில் பெண்ணுரிமையின் அவசியத்தை வலியுறுத்துகிற மன உணர்வையும் எனக்கு உறுதியாக உண்டாக்கிற்று.... நேர்மையான ஈடுபாடான உழைப்பு, துணிச்சல், ஏற்ற கருமத்தில் ஒன்றிப்போதல் என்பனவே அழகாயும் வசீகரமாகவும் வெளிப்படுகின்றன என நான் அப்போதுதான் உணர்ந்துகொண்டேன். இது என்னைப் போன்ற எல்லாப் பெண்களுக்கும் பொருந்துமெனவும் நானஎண்ணுகின்றேன். இத்தகைய அழகை வலியுறுத்துவது பெண்ணின் மேன்மையையும் உயர்த்துவதற்கு ஒப்பானது. இந்தப் போக்கு முறியடிக்கப்படாதது. **– ஷப்னா ஆஷ்மி**

தமிழ் சினிமாவில் புதிய ஆற்றல்கள் முளைவிடுவதன் சிறந்த அறிகுறியாக ‘பருத்தி வீரன்’ படம் சொல்லப்பட்டது. நானும் பார்த்தேன். மிக மோசமான அனுபவத்தைத் தந்த படம் அது. பெண்கள்மீது அத்தனை வெறுப்பைக் கொண்ட அதுபோன்ற திரைப்படத்தை நான் பார்த்ததேயில்லை. துரதிஷ்டவசமாக இதுபோன்ற படங்கள்தான் பிரபலம் பெற்று மிகுந்த வர்த்தக வெற்றியையும் பெறுகின்றன. நல்ல சினிமாவுக்கான உதாரணங்களாகக் கூறப்படும் இப்படங்கள் என் மனத்தில் வலியை ஏற்படுத்துகின்றன.

**– இயக்குநர் அகூர் கோபாலகிருஷ்ணன்**

என் வெற்றுடலை எவ்வளவு நாட்களுக்கு நான் காட்டிக் கொண்டிருப்பேன்? இதனால் நான் அலுப்பு மட்டும் அடையவில்லை. எல்லை மீறிய கவலையும் கொள்கிறேன். சினிமா உலகை விட்டு ஒழிந்து போனால் என்ன என்றுகூட பலமுறை தோன்றும். **– மர்லின் மன்றோ**

கொஞ்சக் காலத்துக்குமுன் காலமான ஆட்ரி ஹெப்பான் ஓர் ஒப்பற்ற நடிகை. ஓர் அனாதை போன்று தோற்றுவிக்கும் முகம். வெள்ளை நிறம் என்பதை மட்டும் மறந்துவிட்டால், ஒர அழகிய சோமாலியா குழந்தை போன்ற தோற்றம். நடித்த படங்களின் குணச்சித்திரங்களும் அப்படியே. ‘Roman Holiday ’ படத்தில் சலிப்புற்ற பிரிட்டிஷ் அரசி, ‘War and Peace’ நடாஷா, ’Nun ‘s Story’ படத்தில் காயமுற்ற எதிரி ஜெர்மன் இராணுவ வீரனை குணப்படுத்த வேண்டிய நர்ஸ், யாரைக் காதலிக்கிறோம் என்பதையே தெரிந்து கொள்ளாத பெண்பாத்திரம் Sabrina Fair, My Fair Lady vyprh, தான் ஒரு சிவப்பிந்தியப் பெண்ணா அல்லது வெள்ளைக்காரப் பெண்ணா என்ற தீர்மானத்துக்கே வராத பெண் Unforgiven படத்தில். கடைசியாக நம்மூர் இயக்குனர்களைக் கவர்ந்த Wait Until Dark. அபாண்டமாக பழி சுமத்தப் பெற்றாலும் கம்பீரத்தைக் கைவிடாத Loudest Whisper படம். இத்தனை படங்களிலும் அவருக்கு ஏக தேசம் ஓர் அனாதை மனப்பான்மை கொண்ட பாத்திரங்களதாம். கடைசிக்காலத்தில் சோமாலியாக் குழந்தைகளுக்கு உதவி புரிய அவர் நியமனம் பெற்றது தற்செயல் அல்ல.

**– மா.அரங்கநாதன்**

# பஞ்சவர்ண மழைக்குக்காரணம் வேற்றுக்கிரக வாசிகளா?



(கொழும்பு)

பஞ்சவர்ண மழை பொழிவதற்கு வேற்றுக் கிரகங்கள் காரணமா என்ற கோணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டின் பல பகுதிகளிலும் பெய்த பல வர்ணங்களிலான மழைக்கும், வேற்றுக் கிரக உயிரினங்களுக்கும் தொடர்புகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. களனிப் பல்கலைக் கழகத்தின் வேதியல் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் டீ. எல்.ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார். சிவப்பு மற்றும் பச்சை உள்ளிட்ட நிறங்களில் பெய்த மழை நீரின் மாதிரிகளை கடந்த மூன்று மாதங்களாக சோதனைக்கு உட்படுத்தியதன் அடிப்படையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் நேற்றையதினம் கதிர்காமம் மற்றும் அனுராதபுரம் கமுக்கன்வெள ஆகிய பகுதிகளில் சிவப்பு நிறத்திலான மழை பெய்திருந்தது. அதற்கு முன்னர் ஹெட்டன், ரம்பேவ, கலேன்பிந்துனவெள, வெலிகந்த, திருகோணமலை, மின்னேசியா உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்த மழை பெய்திருந்தது. என்பது குறிப்பிடத்தக்கது.

# குருநாகலில் கோர விபத்து பயணிகள் இருவர் மரணம்

(கொழும்பு)



கொழும்பு - குருநாகல் வீதியின் நான்கல்ல பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். கெப் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சவுதியில் நிர்க்கதியான இலங்கையர் கொழும்பு திரும்ப முயற்சி

(கொழும்பு)

சர்பியா மைதானத்தில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களை நாட்டிற்கு திருப்பியனுப்புவது குறித்து சவுதி அரேபிய அரசாங்கம் தனது. நிலைப்பாட்டை இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என ஜித்தாவிலுள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இலங்கைப் பணியாளர்கள் தொடர்பில் சவுதி அரேபிய அதிகாரிகளுடன் நேற்றைய தினமும் கலந்துரையாடல் மேற்கொண்டதாக இலங்கை கொன்சியூலர் அலுவலகத்தின் முதல்நிலை செயலாளர் எம்.பி. எம்.சரூக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினைக்கு சவுதிஅரேபிய அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜித்தாவிலுள்ள கொன்சியூலர் அலுவலக அதிகாரிகளை தாம் சந்தித்ததாகவும் தம்மை நாட்டிற்கு அனுப்பிவைப்பது குறித்து சாதகமான பதில் எதனையும் அவர்கள் வழங்கவில்லை என்றும் சர்பியா மைதானத்தில் தங்கியுள்ள இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். கொன்சியூலர் அலுவலக அதிகாரிகள் அவ்வாறு கூறியபோதிலும் சர்பியா மைதானத்தில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும்ப ஆரம்பித்துள்ளனர், என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொதுமுகாமையாளருமான மங்கல ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார். எனினும் உணவுத் தட்டுப்பாடு உட்படப் பல்வேறு பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பணியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தப் பணியாளர்களுக்கு ஜித்தாவிலுள்ள கொன்சியூலர் அலுவலகம் ஊடாக உணவு வழங்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# மருத்துவ சேவையில் தொடரும் முறைகேடு முசலிப்பிரதேசத்தில் மக்கள் சுமக்கும் அவலம்

(மன்னார்)

மன்னார் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்ற நிலையில் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரி முசலிப் பிரதேச பிரஜைகள் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்துள்ளதாக முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சுனேஸ் சோசை தெரிவித்தார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குறிப்பாக 2007ஆம் ஆண்டு நடைபெற்ற இடப்பெயர்விற்கு பிறகு 2009ஆம் ஆண்டு மக்கள் தங்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றப்பட்டனர். ஆனால், இங்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகின்ற ஓர் இடமாக காணப்படுக்கின்றது. 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் சிலாவத்துறை வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரி மாத்திரமே மக்களுக்கு சேவையினை திறம்பட நடத்தி வந்தமையை எமது பிரஜைகள் குழு அவதானிக்க முடிந்தது.

இருந்தும் மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் நோயாளிகளின் வருகையினையும் கருத்தில் கொண்டு 2012 ஒக்டோபரில் இருந்து சிலாவத்துறை வைத்தியசாலைக்கு 2 வைத்தியர்களை நியமித்துள்ளீர்கள். இருந்தபோதிலும் நாளாந்தம் இப்பகுதி மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பதனை பிரஜைகள் குழு அவதானித்துக் கொண்டு இருக்கின்றது. இதில் ஒரு முக்கியமான பிரச்சினைதான் வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் மக்களுடன் நடந்துகொள்ளும் விதங்கள். இந்த விடயம் பற்றிப் பல தடவைகள் மக்கள் எமது பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு எமது பிரஜைகள் குழு பல தடவைகள் இதனை நேரடியாக பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொண்டது.இதன் அடிப்படையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை உங்கள் முன் முன்வைக்கலாம் என எண்ணியுள்ளோம்.

மருந்து கலவையாளர்

•நோயாளிகளுடன் அன்பாக பேசாமல் அவர்களை தரக்குறைவாகப் பேசுவது.

•நோயாளிகளுக்கு மாத்திரைகளை கொடுக்கும்போது எவ்வாறு பாவிப்பது பற்றி விளக்கம் அளிக்காமை. இதைப்பற்றி நோயாளிகள் கேட்டவுடன் நோயாளிகளுடன் எரிபுரியாக கதைப்பதும் இதுபற்றி உங்களுக்கு தேவையில்லை, நான் தரும் மாத்திரைகளை நீங்கள் கொண்டு போடுங்கள் என நோயாளிகளுக்கு கூறுவதும் நோயாளிகளின் மனதில் மனதாங்கலை ஏற்படுத்துகின்றது.

•வைத்தியசாலையில் தமிழ் - முஸ்லிம் ஊழியர்கள் சேவை செய்து கொண்டு இருக்கின்றார்கள். குறிப்பாக தமிழ்பெண் ஊழியர்களுடன் தகாத வார்த்தை பிரயோகங்கள் மற்றும் வார்த்தைகளின் வடிவில் பெண்களுடன் இரட்டை அர்த்தத்துடன் கதைப்பது.

•மாத்திரைகளை மாற்றி மாற்றி கொடுப்பது. போன்ற பிரச்சினைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# சப்ரகமுவப் பல்கலைக்கழகம் அடுத்தவாரம் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மே மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என பல்கலைக்கழக பதிவாளர் எம். எம்.விமலசிறி தெரிவித்தார். அதன்படி பல்கலைக்கழக விடுதிகளில் தங்கும் மாணவர்கள் மே மாதம் 6ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த 4ஆம் திகதி தொடக்கம் சப்ரகமுவ பல்கலைக் கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு பகிஷ்கரிப்பை அடுத்து இந்நிலை ஏற்பட்டது. கடந்த 15ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்சங்கம், பீட சங்கம் என்பன தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் மாணவர் தலைவர்கள் அறுவரின் மாணவர் அந்தஸ்த்து தற்காலிகமாக பறிக்கப்பட்டுள்ளது.

புதுவருட விடுமுறையின் பின் கடந்த 16ஆம் திகதி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களுக்காக திகதி குறிப்பிடப்படாமல் மூடப்பட்டுள்ளது.

# மின்சாரக்கட்டண அதிகரிப்பினால் ஏற்படும் வாழ்வாதாரப்பிரச்சினைகள்

## அமைச்சரவையின் கவனத்துக்கு செல்கிறது

மின்சாரக்கட்டண அதிகரிப்பு தொடர்பான பொதுமக்களின் கருத்துக்கள் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவரப்படவிருக்கிறது. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் சிக்கலுக்கு ஆளாகி இருப்பதாக சிறிலங்கா சமசமாஜ கட்சி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் தலைவர், சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரன இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தாம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தின் போது இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரன குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சரான வாசுதேவ நாணயகாரவும், இதற்கு முன்னர் மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் மூழ்கி சிறுவர்கள் மரணம்



(கொழும்பு)


வத்தளை பிரீத்திபுரக் கடலில் மூழ்கி உயிரிழந்த 13 வயது சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவருடன் நீரில் மூழ்கிய 11 வயதுச் சிறுவன் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த இரண்டு சிறுவர்களும் வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

காணாமற்போயுள்ள சிறுவனைக் கண்டுபிடிப்பதற்காக கடற்படையினரின் ஒத்துழைப்புடன் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



**திருநெல்வேலி மத்தி சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட புத்தாண்டு விளையாட்டுப்போட்டியின் போது விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதையும், போட்டியில் வெற்றி பெற்ற மாணவனுக்கு திருநெல்வேலி மத்தி கிராமஅலுவலர் டினேஸ் பரிசில் வழங்குவதையும் காணலாம். (26)**



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## உயிரியல் I


1) பின்வருவனவற்றுள் எதனை ஓர் உயிரியல் மூலக்கூறாக கருதமுடியாது?
1) காபோவைதரேற்று 2) புரதம் 3) நியுக்கிளிக் அமிலம்
4) இலிப்பிட்டு 5) ATP

2) அழுத்தமான அகமுதலுருச் சிறுவலை மிகக்கூடியளவில் காணப்படுவது?
1) தசைக்கலங்களில் 2) அண்மையான மடிந்தகுழலுருவில்
3) செங்குருதிக்கலங்களில் 4) சிறுநீர்ப்பை மேலணிக்கலங்களில்
5) சதையிக்கலங்களில்

3) புரதம் ஒன்றின் அமைப்பழிவு என்பதனை எடுத்து விளக்குவது,
1) புரதத்தின் முதலான கட்டமைப்பு மாறுதல்.
2) பெப்ரைட்டு பிணைப்புக்களும், இரு சல்பைட்டு பிணைப்புக்களும் உடைக்கப்படுதல்.
3) புரதத்தின் புடையான கட்டமைப்பு இழக்கப்படுதல்.
4) பெப்ரைட்டு பிணைப்புக்களின் நீர்ப்பகுப்படைதல்.
5) புரதமூலக்கூற்று வடிவத்தில் ஏற்படும் தற்காலிக மாற்றம்.

4) கலப்பிரிவுச் செயன்முறையில், DNA இன் தற்பகர்ப்பு நடைபெறுவது,
1) இடை அவத்தையில் 2) முன் அவத்தையில்
3) அனு அவத்தையில் 4) மேன்முக அவத்தையில்
5) ஈற்று அவத்தையில்

5) சுவாசவீதம், வெப்பநிலை தொடர்பான மாற்றத்தைத் திறம்பட எடுத்துக்காட்டும் வரைபு, (x அச்சில் வெப்பநிலை, Y அச்சில் சுவாசவீதம்)




6) நீர் விருப்புள்ள பதார்த்தங்களினால் நீரழுத்தப்படித்திறன் சார்பாக, நீர்மூலக்கூறுகள் புறத்துறுஞ்சப்படுவதனால் ஏற்படும் நீரின் அசைவு,
1) உட்கொள்ளுகை 2) திணிவோட்டம்
3) பரவல் 4) குழியக்குடிதல்
5) உயிர்ப்பான அகத்துறுஞ்சல்

7) விலங்குகளில் கட்டமைப்பிலும், தொழிற்பாட்டிலும் புரதங்களே சகல உயிர் சார்ந்த மூலக்கூறுகளிலும் பன்மை நிலையை உச்சமாகக் காண்பிக்கும் மூலக்கூறுகளாகும். அவற்றின் கட்டமைப்பு, தொழிற்பாட்டு தொடர்புகளில் பிழையானது?
1) Immunoglobin - பாதுகாப்பு
2) Trypsin - உணவுச் சமிபாடு
3) Insulin - ஒரு சீர் திடநிலையைப் பேணுதல்
4) Haemoglobin - கடத்தல்
5) Elastin - முதலான சக்திக் களஞ்சியம்

8) பின்வரும் தாவரக்கூட்டங்களுள் எது கட்டமைப்பு ரீதியான பன்மைத்துவத்தை பெருமளவில் காண்பிக்கின்றது?
1) Lycopyta 2) Pteropyta 3) Bryopyta
4) Anthopyta 5) Cycadopyta

9) பின்வரும் மூலகங்களுள் எந்தவொரு மூலகம் தாவரங்களில் மிகக்குறைந்தளவில் குடிபெயரக்கூடியது?
1) N 2) P 3) Fe 4) K 5) Mg

10) சுவானின் கலங்களினால் சூழப்பட்ட நியூரோன்களில் முனைவழிதல், மீள் முனைவாக்கம் என்பவை நிகழ்வது,
1) இரன்வியரின் கணுக்களில் 2) கலவுடலில்
3) மயலின் கவசங்களில் 4) வெளிக்காவு நரம்பு முனைகளில்
5) கலமுதலுருவில்

11) நீண்ட காலத்துக்குரிய இருகருக்கூட்டு நிலை காணப்படுவது,
1) Mucor 2) Agaricus 3) Saccharomyces
4) Allomyces 5) Aspergillus

12) பின்வருவனவற்றுள் வீக்கமாற்றம் காரணமாக நிகழும் அசைவுக்கு உதாரணமாக அமையாதது.
1) தொட்டாற்சுருங்கி தாவரங்களின் இலைகள் இரவில் வாடுதல்.
2) Daisy பூ மலருதல்.
3) தாமரை, அல்லி என்பனவற்றின் பூக்கள் ஒளியில் விரிதல்.
4) Tulip பூக்கள் சூரியனின் பிரசன்னத்துடன் மலருதல்.
5) அகத்தி இலைகள் இரவில் வாடுதல்.

13) Symplast பாதை, புன்வெற்றிடப்பாதை வழியாக மாத்திரம் நீரின் அசைவு இடம்பெறுவது,
1) வேரின் அகத்தோல் 2) வேரின் பரிவட்டவுறை
3) தண்டின் மையவிழையம் 4) வேரின் மேற்பட்டை
5) இலைநடுவிழையக்கலங்கள்

14) சிறுநீரகத்தியின் அண்மையான மடிந்தகுழலுரு பகுதியில், கலன்கோள வடிநீரவத்துக்கும், குருதிக்கும் இடையிலான பதார்த்தப் பரிமாற்றங்களில் தவறானது?
1) நீர் - பிரசாரணம்
2) குளுக்கோசு - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
3) யூரியா - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
4) K + - உயிர்ப்பற்ற மீளஅகத்துறிஞ்சல்
5) Na+ - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்

15) அதிரீனலீ ன் ஓமோனின் செயற்பாடு தொடர்பான சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) குருதிக் குளுக்கோசு மட்டத்தை குறைவடையத்தூண்டும்
2) சுவாச வீதத்தினைக் குறைவடையச் செய்யும்.
3) உடல் அனுசேபவீதத்தினைக் குறைவடையச் செய்தல்.
4) ஈரலில் கிளைக்கோசனை குளுக்கோசாக மாற்றுதல்.
5) கண்மணியினை சுருங்கச்செய்தல்.

16) சிற்றிடைவெளி இழையத்தில் அமீபாப்போலி அசைவினைக் காட்டும் திறனுடைய கலம் எது?
1) நார் அரும்பர்கலம் 2) பெருந்தின்கலம்
3) அடிநாட்டக்கலம் 4) முதலுருக்கலம்
5) கொழுப்புக்கலம்

17) உயிரியல் படிக்கின்ற ஒரு மாணவன், விலங்கு ஒன்றின் பெயரைக் குறிப்பிடும்போது சாதிப்பெயரினையும், இனத்துக்குரிய வேறுபடுத்திப் பெயரினையும் இரு வேறு சொற்களாகக் குறிப்பிட்டான். இது, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும். இதனை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி
1) Ernest Hackle 2) Robert Wittakar
3) Carl Wose 4) Theophrustus
5) Carolaus Linneaus

18) பூச்சிகளின் சுவாசக்கட்டமைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள், பிழையானது?
1) இவற்றின் சுவாசமேற்பரப்பாக புன்வாதனாளிகள் காணப்படும்.
2) இவை கலனற்ற சுவாசக்கட்டமைப்பாக தொழிற்படும்.
3) புன்வாதனாளிகளில் கைற்றின் திடிப்புகள் காணப்படமாட்டாது.
4) சுவாசத்துவாரங்களில் தடித்த மெழுகுப்படை காணப்படுவதனால், பூச்சிகளில் நீர் இழக்கப்படுவது குறைக்கப்படும்.
5) புன்வாதனாளியூடான வாயுக்கடத்தலில் குருதி பங்கேற்கமாட்டாது.

19) பின்வருவனவற்றுள் பிசிர்கள் அல்லது சவுக்குமுனைகள் எக்கூட்டத்தில் ஒருபோதும் காணப்படுவதில்லை?
1) Nematoda 2) Annelida
3) Mollusca 4) Cnidaria
5) Echinodermate

20) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கங்கள் தொடர்பாக தவறான கூற்று
1) அவை பச்சைய உருமணியின் தைலகோயிட்டு மென்சவ்வில் நடைபெறும்.
2) இதன்போது விளைவாக ATP சக்தி மாத்திரம் உருவாக்கப்படலாம்.
3) நிறமாலையின் சிவப்பு, பச்சைப் பகுதிகளிலேயே ஒளித்தாக்கவீதம் உயர்வானதாகக் காணப்படும்.
4) ஒளித்தாக்கங்களில் சம்பந்தப்பட்ட இலத்திரன் வாங்கிகளும், காவிகளும், தைலகோயிட்டு மென்சவ்வுக்கு இடையில் அமைந்துள்ளன.
5) ஒளித்தொகுதி II இன் $P_{680}$ இனால் இழக்கப்படும். இலத்திரன்கள் நீரின் ஒளிப்பகுப்பின்போது விடுவிக்கப்பட்ட இலத்திரன்களால் மாற்றீடு செய்யப்படும்.

21) மனித சதையி தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
1) சதையச்சாறு மூன்று புரதப்பிரிப்பு நொதியங்கள் கொண்டது.
2) சதையச்சாற்றில் காணப்படும் insulin குருதிக்குளுக்கோசு மட்டத்தைச் சீராக்கும்.
3) Secretin கதையியின் தொழிற்பாட்டைத் தூண்டுவதன் காரணமாக அதிகளவு சமிபாட்டு நொதியங்கள் கொண்ட சதையச்சாறு சுரக்கப்படும்.
4) இதில் இலங்கசான்சு சிறுதீவுகள் காணப்படுவதனால் புறஞ்சுரப்பியாகவும், சதையகுலைகள் காணப்படுவதனால் அகஞ்சுரப்பியாகவும் தொழிற்படுகின்றது.
5) சதையச்சாற்றில் அதிகளவு சீதம் காணப்படுவதனால் முன்சிறுகுடலுக்கு வரும் உணவை திரளாக்கி வழுக்கும் இயல்பை ஏற்படுத்தும்.

22) மனித தசைகள் தொடர்பான கூற்றுக்களுள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது?
1) அருட்டப்படக்கூடியன.
2) வன்கூட்டுத்தசைகள், இதயத்தசைக் கலங்களில் வரிகள் காணப்படும்.
3) மழமழப்பான தசைகள் கிளைகளுடன் இணைக்கப்பட்டிருக்கமாட்டாது.
4) இதயத்தசைக்கலங்களை இணைத்து இடைபுகுந்த வட்டத்தட்டுக்கள் காணப்படும்.
5) வன்கூட்டுத்தசைகள், இதயத்தசைகளின் சுருக்கம் தன்னாட்சி நரம்புத் தொகுதியினால் கட்டுப்படுத்தப்படும்.

23) நொதியங்கள் எதனையும் சுரக்காததும் ஆனால் உணவின் சமிபாட்டுடன் தொடர்பானதும், உணவுக்கால்வாயுடன் தொடர்புடையதுமான கட்டமைப்பு எது?
1) ஈரல் 2) சதையி 3) இலிபர்கூனின்மறைகுழி
4) உதரச்சுரப்பி 5) உணர்கொம்புச்சுரப்பி

24) பின்வருவனவற்றுள் உரியக் கொண்டு செல்லல் தொடர்பாக தவறானது,
1) இது நேர் அமுக்கத்தின் கீழ் நடைபெறும்.
2) நெய்யரிகுழாயூடாக உணவு அசைதலில், நீர்நிலையியல் அமுக்கம் பங்குகொள்கின்றது.

3) துணைக்கலங்களுக்கும், நெய்யரிக்கலன்களுக்கும் இடையிலான முதலுரு இணைப்புக்களூடாக சேதன உணவு நெய்யரிக்கலன்களுள் சுரக்கப்படும் உயிர்ப்பான செயன்முறையாகும்.
4) இதன்போது உணவு கொண்டு செல்லப்படும் பிரதான வடிவம் சுக்குரோசு ஆகும்.
5) நெய்யரிக்குழாயூடான உணவு அசைதலில், துணைக்கலங்களில் உள்ள இழைமணிகள் பங்கு கொள்கின்றன.

25) மனிதனின் நீர்ப்பீடனத்துடன் தொடர்புடைய அகஞ்சுரப்பியும், அதன் ஓமோனும் முறையே,
1) கீழ்கழுத்துச்சுரப்பி - தைமோசின்
2) கீழ்கழுத்துச்சுரப்பி - மூ அயடோ தைரோனின்
3) கேடயப்போலிச்சுரப்பி - அல்டஸ்ரோன்
4) கபச்சுரப்பி - வளர்ச்சி ஓமோன்
5) கேடயப்போலிச்சுரப்பி - தைரொக்சின்

26) தசைக்கலங்களில் நிகழும் நொதித்தலின்போது NADH இல் இருந்து இறுதியாக $H^-$ இனை ஏற்கும் சேர்வை எது?
1) பைரூவேற்று 2) எதனல் (Ethanal)
3) எதனோல் (Ethanol) 4) மூலக்கூற்று $O_2$
5) அசற்றல்டிகைட்டு

27) விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத்தொகுதி பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பொய்யானது?
1) திறந்த சுற்றோட்டத்தொகுதி காணப்படுதல் எல்லா மொலஸ்காக்களுக்கும், சிறப்பியல்பு ஆகும்.
2) மூடிய சுற்றோட்டத் தொகுதிகளில், ஒட்சிசனேற்றிய குருதியினதும், ஒட்சிசன் அகற்றிய குருதியினதும் கலப்பு நடைபெலாம்.
3) முள்ளந்தண்டு விலங்குகளிலே குருதிக்கும், இழையங்களுக்கும் இடையே பதார்த்தப் பரிமாற்றம் குருதிமயிர்க்குழாயூடாக நடைபெறுகின்றன.
4) SA கணு முலையூட்டிகளில் விரைவு வீதமாக்கியாக தொழிற்படும்.
5) மனிதனில் பெருமளவான ஒட்சிசனைக் குருதியில் காவிச்செல்வது Heamoglobin ஆகும்.

28) நரம்பிணைப்பு பிளவூடான நரம்புக்கணத் தாக்கத்தில், நரம்பிணைப்பு பிளவில் இருந்து நரம்பிணைப்பின் முன்னான மென்சவ்வுக்கும், நரம்பிணைப்பின் பின்னான மென்சவ்வுக்கும் அசையும் அயன்கள் முறையே,
1) $Ca^{++}$, $K^+$ 2) $Ca^{++}$, $Na^+$
3) $Na^+$, $Ca^{++}$ 4) $Ca^{++}$, $Cl^-$
5) $K^+$, $Cl^-$

29) வித்தகவிழையக் கலங்களில் காற்றுச்சுவாசம் ஒன்றில் சுவாசக்கீழ்ப்படை அடையும் இரசாயண மாற்றம் தரப்பட்டுள்ளது.
$C_6H_{12}O_6 + 6\,O_2 \rightarrow 6CO_2 + 6H_2O$
இதிலிருந்து அறியக்கூடிய சுவாச ஈவின் பெறுமானம்
1) 2.0 2) 0.5 3) 1.0 4) 0.7 5) 0.9


30) மனிதனின் பற்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது?
1) அவை யாவும் தனிவேருடையன.
2) மனிதனில் உதிர் பற்களின் எண்ணிக்கை 22 ஆகும்
3) பற்களின் பெரும் பகுதியினை பன்முதல் ஆக்குகின்றது.
4) மனிதனில் உதிர் பற்களில் கடவாய்ப்பற்கள் காணப்படுவதில்லை.
5) இவை மேல், கீழ்த்தாடைகளின் குழிகளில் அமைந்த ஓரினப்பற்களாக காணப்படும்.

31) சுகதேகியான மனிதனின் செவியில் சமநிலையை பேணுதலுடன் தொடர்புடைய வாங்கிகளைக் கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு,
1) தோற்பை 2) செவிப்புலனுக்குரிய கால்வாய்
3) செவி நரம்பு 4) அடிமென்சவ்வு
5) நீள்வட்டப்பலகனி

32) குருதியிலே ADH அதிகரிக்கும்போது மனித சீறுநீரகத்தியில் நீர் அதிகளவு மீள அகத்துறிஞ்சப்படுவது?
1) அண்மையான மடிந்தகுழலுரு 2) சேர்க்கும் கான்
3) என்லெயின் ஏறும்தடம் 4) சேய்மையான மடிந்தகுழலுரு
5) என்லெயின் இறங்கும் அவயவம்.

33) மனிதனில் அதிபரவிழுவிசைக்குக் காரணமாக அமையாதது பின்வருவன வற்றுள் எது?
1) மன அழுத்த நிலை
2) குருதியில் குறைவடர்த்தி உள்ள இலிப்போபுரதத்தின் அளவு அதிகரித்தல்.
3) அதிகளவு மதுபானம் அருந்துதல்.
4) வயதாதல்
5) குருதியில் Oestrogen ஓமோனின் அளவு அதிகரித்தல்.

34) படத்தில் காட்டப்பட்டுள்ள கலம், கரைசல் தொகுதி தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?




1) இக்கலத்தின் நீரழுத்தம் -450kPa ஆகும்.
2) இக்கரைசல்த் தொகுதி ஓர் அதிபிரசாரண கரைசலாகும்.
3) கலம் முதலுருச்சுருக்க தொடக்க நிலையில் இருக்கும் போது கலத்தின் அமுக்க அழுத்தம் +350kPa ஆகும்.
4) கலம் சமநிலையில் காணப்படுகையில், கலத்தின் கன்வளவு குறைவடைந்து காணப்படும்.
5) இக்கலத்தின் கரைய அழுத்தம் மாறாது காணப்படும்.

35) சுகதேகி மனிதன் ஒருவனின் இயக்க நரம்புக்கலத்தின் ஓய்வுமென்சவ்வு அழுத்தம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) அது கிட்டத்தட்ட - 70m V ஆகும்.
2) இதனைப் பேணுவதற்கு ATP சக்தி பயன்படும்.
3) இது தூண்டலினை வாங்கக்கூடிய நிலையாகும்.
4) இதன்போது $Na^-$ இனது செறிவு நரம்புக்கலத்திற்கு வெளியே இருப்பதனை விட நரம்புக்கலத்தினுள் மிக உயர்வாகக் காணப்படும்.
5) இது நரம்புக்கலத்தின் முதலுரு மென்சவ்வில் ஏற்படுகின்றது.

36) மானிடப் பெண்ணில் சூலிட்ல் நிகழும் காலத்தில் குருதியில் அதிகளவு செறிவில் காணப்படும் ஓமோன்?
1) FSH 2) LH 3) Inhibin
4) Oestrogen 5) GH

37) மனிதத்தோலின் கட்டமைப்பு, தொழில் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது,
1) மனிதத்தோலின் மேற்றோல் இருபடைகளைக் கொண்டது.
2) மனிதனின் மேற்றோலில் உள்ள பசினியன் சிறுதுணிக்கை அமுக்கத்துக்கு உணர்வுடையது.
3) மனிதத்தோலின் வியர்வைச் சுரப்பிகளினால் கிரியற்றினைன் கழிவுப்பொருளாக வெளியேற்றப்படும்.
4) தோலின் நெய்ச்சுரப்பிகளின் சுரப்புக்கள் தோலின் மேற்பரப்பையும், மயிரினையும் வளையக்கூடியதாகப் பேணும்.
5) மனிதத்தோலின் உட்தோல் தசையிழையத்தினால் ஆக்கப்பட்டது.

38) புகைக்கும் பழக்கம் காரணமாக ஏற்படும் நுழையீரல் நோய்களில் Emphysema ஒன்று, இதற்கு காரணம் புகையில் உள்ள சில பதார்த்தங்களினால்,
1) பிசிர்க்கலங்களில் பிசிர் அசைவு நிரோதிக்கப்படுதல்.
2) நீர்ப்பகுப்பு நொதியங்களினால் சிற்றறைச்சுவர் அழிக்கப்படுதல்.
3) Carboxyhaemoglobin தோன்றுதல்.
4) சுவாசக்குழாய்களில் அழற்சி ஏற்படுதல்.
5) சுவாசப்பைக்குழாய் மேலணிக் கலங்களில் கலப்பெருக்கத்தினைத் தூண்டுதல்.

39) வைரசுகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) பெரும்பாலான தாவர வைரசுகள் கருப்பதார்த்தமாக DNA ஐக் கொண்டவை.
2) எல்லா வைரசுக்களும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகளாகும்.
3) இவை யாவும் கல ஒழுங்கமைப்பு அற்றவை.
4) உயிருள்ள கலங்களில் மாத்திரமே வைரசுக்கள் தம்மை பெருக்கிக்கொள்ளும்.
5) சில வைரசுக்கள் அவற்றின் கப்சிட்டுக்களில் பொலிமரேசு எனும் நொதியத்தைக் கொண்டுள்ளன.

40) சூழல் வெப்பநிலை மனிதனின் உடல் வெப்பநிலையிலும் குறைவடையும் போது மனிதனில் நடைபெறாத செயற்பாடு,
1) தோலின் கீழான குருதிமயிர்க்குழாய்கள் சுருக்கமடைதல்.
2) மயிர்நிறுத்தி தசைகள் சுருக்கமடைதல்.
3) குருதியில் தைரொக்சின், அதிரீனலின் ஓமோன்களின் அளவு குறைவடைதல்.
4) வியர்வைச் சுரப்பிகளின் தொழிற்பாடு நிரோதிக்கப்படும்.
5) குரோசின் குமிழ்கள், சுயாதீன நரம்பு முடிவிடங்கள் தூண்டப்படும்.

**41 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது / ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது / சரியானவை என முடிவு செய்க. பின்னர் பொருத்தமான இலக்கத்தை தெரிந்தெடுக்க.**

A,B, D ஆகியன சரியானவை எனின் .................... 1
A, C, D ஆகியன சரியானவை எனின் .................... 2
A, B ஆகியன சரியானவை எனின் .................... 3
C, D ஆகியன சரியானவை எனின் .................... 4
வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியெனின் .................... 5

பொழிப்பாக்கிய பணிப்புரைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| A,B,D சரியானவை | A,C,D சரியானவை | A,B சரியானவை | C,D சரியானவை | வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியானவை |

41) பச்சைய உருமணியின் தைலக்கோயிட்டுக்களில் சூரியசக்தி, இரசாயன சக்தியாக மாற்றீடு செய்யப்பட்டிருக்கும் சேர்வை / சேர்வைகள்.
1) ATP 2) NADPH 3) NADH 4) மாப்பொருள் 5) $O_2$

42) குருதியின் கனவளவை அதிகரிக்கச் செய்வதில் ஈடுபாடு காட்டும் ஓமோன் / ஓமோன்கள் எது/ எவை?
A) ADH B) Aldestrone C) LH
D) Renin E) தைரொக்சின்

43) உயிரின் பாகுபாட்டில் Pylum Echinodermata களுக்கு தனித்துவமான இயல்பு / இயல்புகள் எது / எவை?
A) அகவன்கூடு காணப்படுதல்
B) குழாய்ப்பாதங்கள் காணப்படுதல்.
C) ஈராரைச்சமச்சீரைக் கொண்டிருத்தல்
D) நீர்க்கலன் தொகுதி காணப்படுகின்றமை
E) வறுகி காணப்படுதல்.


44) Eukaryota கலம் ஒன்றின் கலவட்டச் செயன்முறையின் போது தானாகவே இரட்டிப்படையும் கலப்புன்னங்கம் / கலப்புன்னங்கங்கள் எது / எவை?
A) இழைமணி B) நிறமூர்த்தம் C) பச்சையவுருமணி
D) புன்மையத்தி E) புன்கரு


# கொழும்பு ஆனந்தாவைத் தோற்கடித்து சிவகுருநாதன் கிண்ணத்தை வென்றது யாழ். இந்து

(யாழ்ப்பாணம்)

வாமணன்,கல்கோபன், சஜீபன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின்மூலம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்று வி.ரீ. எஸ். சிவகுருநாதன் நட்புறவு வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான வீ.ரி.எஸ். சிவகுருநாதன் கிண்ண நட்புறவு இரண்டு நாள்இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.







நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி, லக்கன ஜெயசேகராவின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்கன ஜெயசேகர 34, டனுஜ மதுஷன் 49, சம்மு 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வாமணன், மதுஷன் தலா மூன்று, சாரங்கன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ரவிண்டு,குணசேகரா ஆகியோரின்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 40 ஓட்டங்களைப் பெற்றவேளை நான்கு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த சஜீபன், ஜஸ்மினன் இணை அணியின் நிலையை உணர்ந்துபொறுப்பாக ஆடினர். இந்த ஜோடியின் ஆட்டத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி நெருக்கடியிலிருந்துமீண்டது.இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களைப்பெற்றது. இறுதியில்யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜீபன் 68, வாமணன் 44, ஜஸ்மினன் 27 ஓட்டங்களைப்பெற்றனர்.பந்து வீச்சில் ரவிண்டு மூன்று, குணசேகர இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டு ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி லக்கல ஜெயசேகர, தமலக அத்துலக் முதலி ஆகியோரின்சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஆரம்பத்தைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய இந்த ஜோடி இந்துக் கல்லூரி அணியின் பந்துவீச்சை சிறப்பான முறையில் எதிர்கொண்டது. இருப்பினும் 50 ஓட்டங்களை இந்த ஜோடி பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரி வீரர் வாமணனின் பந்து வீச்சை எதர்கொள்ள முடியாமல் ஆனந்தாக் கல்லூரி அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. எந்தவொரு வீரரும் களத்தில் நிலைத்து நின்று ஆட முடியாதளவிற்கு பந்து வீச்சில் வாமணன் சிறப்பான முறையில் செயற்பட்டார். இறுதியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்கல ஜெயசேகர 30, அத்துலக்முதலி 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வாமணன் 41 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, மதுஷன் 22 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ப்திலுக்கு 103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி, 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தடுமாறியது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய கல்கோபன், சஜீபன் இணை மிகச் சிறப்பான முறையில் ஆனந்தாக் கல்லூரி அணியின் பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு வெற்றியைப் பதிவாக்கியது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கல்கோபன் 58, சஜீபன் 19 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இதன் மூலம் வி.ரீ.எஸ். சிவகுருநாதன் நட்புறவு வெற்றிக் கிண்ணத்தை யாழ். இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.கடந்த ஆண்டு முதல்போட்டியில் ஆனந்தாக் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின்ஆட்ட நாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் யாழ். இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த வாமணன், சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சஜீபன், சிறந்த களத்தடுப்பாளராக ஆனந்தாக் கல்லூரி அணியைச் சேர்ந்த ரவிண்டு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நட்புறவை வளர்க்கும் வகையில் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் சிங்களத்திலும், கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் தமிழிலும் உரையாற்றிமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் கல்லூரிச் சமூகங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அதிபர்கள், பழைய மாணவர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்கள், பழைய மாணவர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 42)








# வென்றது ராஜஸ்தான்

(ஜெய்ப்பூர்)

ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 36ஆவது ஆட்டம் நேற்று ராஜஸ்தானில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஹைதராபார் சன் ரைசர்ஸ் அணி மளமளவென விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆறு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய டரன் சமி அதிரடியாக ஆடி அணி யின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார் இறுதியில் சன் ரைசர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டரன் சமி 60, மார்ஷ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்க்னர் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வட்சனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17.2 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் 53 பந்துகளை எதிர்கொண்ட வட்சன் நான்கு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கப்டன் ராவிட் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். போட்டியின் ஆட்டநாயகனாக போல்க்னர் தெரிவானார்.





# மனநல மருத்துவமனையில் தீ விபத்து ரஷ்யாவில் 12பேர் உடல் கருகிப் பலி



ரஷ்யாவில் மனநல மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து சம்பவத்தில் 12 பேர் பலியாகியுள்ளனர்.

ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் இருந்து வடபகுதியில் 120 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ரமென்ஸ்கி நகரில் மனநல மருத்துவமனை நேற்று முன்தினம் திடீரென தீப்பிடித்துள்ளது.முதலில் கூரையில் பிடித்த தீ பின்னர் மளமளவென பரவி மருத்துவமனை முழுவதும் பரவியது. தகவல் அறிந்ததும் பொலிஸாரும், தீயணைப்புப்படையினரும் விரைந்து சென்று 3 ஊழியர்களை மட்டுமே உயிருடன் மீட்டுள்ளனர். தீ விபத்து நடைபெற்ற பொழுது மருத்துவமனையில் 41 பேர் இருந்துள்ளனர்.

இவர்களில் 12 பேரின் உடல்களை மட்டுமே கைப்பற்றினர். எனவே, மீதமுள்ள 38 பேரும் தீயில் கருகி இறந்துள்ளனர். இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.


# கனடாவில் சிறைக்கைதிகளுக்கு புதிய சட்டம் அறிமுகம்



கனடாவில் கொடூரக்கொலை, பாலியல் வன்முறை, ஆட்கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபட்டு சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கு முதல் 25 ஆண்டுகளுக்கு பரோல்(Parole) வழங்கப்படுவதில்லை.இனி நாற்பதாண்டுகளுக்கு இந்த பரோல் வழங்கக்கூடாது என்று இப்புதிய சட்ட மசோதா' அறிவிக்கவுள்ளது. மணிடோபாவின் பழமைவாதக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெசான் (James Bezan) இந்த மசோதாவை அறிமுகம் செய்துள்ளார்.

இது குறித்து பெசான் கூறுகையில், நான் குற்றவாளிகளின் தண்டனைக் காலத்தை அதிகமாக்கவில்லை. ஆனால் தண்டனையை அவர்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த சட்டத்தை கொண்டு வந்தேன் என்று தெரிவித்துள்ளார். மேலும், இந்தப் புதிய சட்ட மசோதாவின் மீது அரசு வாக்கெடுப்பு நடத்தவுள்ளது என்று சட்ட அமைச்சர் ராப் நிக்கல்சன்(Rob Nicholson) கூறியுள்ளார்.

# இஸ்ரேலில் குடியேற வசதியாக "இயேசு கிறிஸ்து" பெயர் மாற்றம்



இஸ்ரேலில் குடியேற வசதியாக 'இயேசு கிறிஸ்து' என்று பெயரை மாற்றிக் கொண்டுள்ளார் ரஷ்யர் ஒருவர்.

ரஷ்யாவின் செல்யபின்ஸ்க் நகரை சேர்ந்தவர் வியாசேஸ்லவ் (வயது- 49). இவர் இதுவரை தனது பெயரை 4 முறை மாற்றி பாஸ்போர்ட்டிலும் பதிவு செய்துள்ளார்.இம்முறை, அவர் மத நம்பிக்கையின் அடிப்படையில் தனது பெயரை 'யுவா பென் மர்யம் அல்-மசி' என்று மாற்றிக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட எபிரேய பெயருக்கு தமிழில் 'மேரியின் மகனும் கிறிஸ்துவுமான இயேசு' என்று பொருள்.

இந்த தகவலை வெளியிட்ட உள்ளூர் செய்தி நிறுவனம், 'வியாசேஸ்லவ் எப்போதுமே சுவிசேஷம் பற்றி பேசி வந்தார். இயேசு கிருஸ்து என்று பெயர் மாற்றிக் கொள்வதால், ஜெருசலேம் நகருக்கு புனிதப் பயணம் செல்லவும், இஸ்ரேல் நாட்டின் குடிமகனாகவும் வாய்ப்புக் கிடைக்கலாம் என அவர் கருதி இருக்கக்கூடும்' என்று தெரிவித்துள்ளது.

# பங்களாதேஷ் கட்டடம் சரிந்ததில் பலியானோர் தொகை 300 ஆக உயர்வு

பங்களாதேஷ் கட்டட விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது. தலைநகர் டாக்காவின் புறநகரில் உள்ள சவார் என்ற இடத்தில் 8 மாடி ஆயத்த ஆடை தயாரிப்பு தொழிற்சாலைக் கட்டடம் கடந்த 2 நாட்களுக்கு முன்பு இடிந்தது.அதில் 100க்கும் மேற்பட்டோர் இறந்தனர். 1000 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

அங்குதீயணைப்பு படையினரும், பொலிஸாரும் இணைந்து இரவு பகலாக மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இடிபாடுகளுக்குள் சிக்கி பலியானவர்கள் பலரது உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனால் இறந்தோர் எண்ணிக்கை300ஆக உயர்ந்துள்ளது.



இன்னும் 3 ஆயிரம் பேர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி தவிக்கின்றனர். அவர்களுக்கு வெளியில் இருந்து தண்ணீரும், உணவும் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களை உயிருடன் மீட்கும் பணியில் பொதுமக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மருத்துவமனையில் காயங்களுடன் சிகிச்சை பெறுபவர்களுக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் ரத்த தானம் செய்து வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவில் மட்டும் 41பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இருந்தாலும் இன்னும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. கட்டடம் இடிந்ததில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பங்களாதேஷ் ஒரு நாள் துக்கதினம் அறிவித்துள்ளது. மேலும் அந்நாட்டு தேசிய கொடி அனைத்து அரசு அலுவலகங்களிலும் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

உலகச் செய்திகள்

# "பொஸ்டன்" நகரைத் தாக்கியவர்கள் நியூயோர்க்கையும் தகர்க்கத் திட்டம்

## – கைதானவர் வாக்குமூலம்



பொஸ்டன் நகரில் தாக்குதல் நடத்திய சகோதரர்கள் நியூயோர்க்கை தகர்க்கவும் திட்டம் தீட்டியிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொஸ்டன் நகரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மரதன் போட்டியில் இரண்டு சக்தி வாய்ந்த குக்கர் குண்டுகள வெடித்தன்.இத்தாக்குதலில் 3. பேர் பலியானதுடன் சுமார் 180 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 16 பேரின் கை, கால்களை அகற்றிய பின்னரே உயிருடன் காப்பாற்ற முடிநதது.

குண்டு வெடித்த இடத்தில் இருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை வைத்து சந்தேகத்திற்குரிய இரு நபர்களை பொலிஸார் தேடி வந்தனர். இவர்களில் ஒருவர் பொலிஸார் தேடுதல் வேட்டையின் போது பலியானார். அவரது தம்பி டுசோகர் ட்சர்னேவ் என்பவரை சுற்றிவளைத்து பொலிஸார் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸாருடன் நடைபெற்ற துபாக்கிச் சண்டையில் படுகாயமடைந்ததால் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், மருத்துவமனையில் பொலிஸாரிடம் எழுத்து மூலமாக வாக்குமூலம் அளித்த அவர், வீட்டில் இருந்த மேலும் சில குக்கர் வெடிகுண்டுகளை வைத்து நியூயோர்க் நகரை தகர்க்க நானும் எனது அண்ணனும் திட்டமிட்டிருந்தோம் என்று கூறியுள்ளார்.

நியூயோர்க்கின் பரபரப்பு மிக்க டைம்ஸ் ஸ்கொயர் பகுதியில் அவன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் பொலிஸார் ்கைப்பற்றியுள்ளனர்.

# தேர்தல் கூட்டத்தில் குண்டுவெடிப்பு கராச்சியில் 10 பேர் உயிரிழப்பு


கராச்சியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

கராச்சி நகரின் மோமினாபாத் பகுதியில் உள்ள அவாமி தேசிய கட்சி அலுவலகம் அருகே அக்கட்சியின் வேட்பாளர் பிஷர் ஜான் தேர்தல் பிரசாரம் செய்தார்.அவரது பேச்சைக்கேட்க ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். அப்போது, பயங்கர சத்தத்துடன் தீப்பிழம்பு வெடித்து சிதறியது. கூடியிருந்த மக்கள் தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். வேட்பாளர் பஷிர் ஜான் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இச்சம்பவத்தில் 10 பேர் பலியாகினர். 25இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றன்ர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் புலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். குண்டு வெடித்த சத்தம் பல கி. மீற்றர் தொலைவிற்கு கேட்டதாகவும், சம்பவம் நடந்த இடத்தின் அருகில் இருந்த வீடுகள் மற்றும் கடைகள் பலத்த சேதம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரட்டைக்கோபுரத் தாக்குதல் நடாத்திய விமானத்தின் பாகம் கண்டுபிடிப்பு



அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் நோக்கி பறந்து கொண்டிருந்த 4 பயணிகள் விமானங்களை கடந்த 11-9-2001 அன்று கடத்திய அல்-கொய்தா தீவிரவாதிகள், அந்த விமானங்களை நியூயோர்க்கின் கம்பீரச் சின்னமாக திகழ்ந்த இரட்டைக் கோபுரங்களின் மீது மோதி வெடிக்க வைத்தனர்.

இந்தத் தீவிரவாத தாக்குதலில் 2 ஆயிரத்து 996 பேர் பலியாகினர். 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். சுமார் 12 ஆண்டுகளாக நினைவுச் சின்னமாக 'கிரவுண்ட் ஜீரோ' என்றழைக்கப்படும் அந்த இடத்தில் ஆயிரத்து 776 அடி உயரம் கொண்ட புதிய இரட்டைக் கோபுரம் கட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் லோவர் மன்ஹேட்டன், கிரவுண்ட் ஜீரோ பகுதியில் உள்ள ஒரு மசூதியின் கட்டுமானப் பணிகளைப்பார்வையிட சென்ற அதிகாரிகள், சந்தேகப்படும் வகையில் பழுதடைந்த ஒரு இயந்திரம் காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

இதனையடுத்து, பொலிஸார் அங்கு விரைந்து சென்று பார்த்தபோது, இரண்டு கட்டடங்களுக்கு இடையில் ஓர் இயந்திரம் சிக்கிக் கொண்டிருப்பது தெரிய வந்தது.அதனை வெளியே எடுத்து ஆய்வு செய்த போது, விமானம் தரையிறங்கும் வேளையில் இயக்கப்படும் உபகரணம் அது என்பது தெளிவாகியது.இரட்டைக் கோபுரம் மீது தாக்குதல் நடத்திய போயிங் விமானத்தின் பாகமாக அது இருக்கக்கூடும் எனக்கருதிய பொலிஸார், அப்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

# மலேரியா நோயிலிருந்து விடுபட கூடுதல் அவதானம் தேவை

## சுகாதார அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு).

மலேரியா நோயினை 2014 ஆம் ஆண்டிற்குள் இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டுமென்ற இலக்கினை நோக்கி செயற்படுகின்ற போதிலும் அந்நோய் மீண்டும் தலைதூக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதனால் அனைவரும் அந்நோயை கட்டுப்படுத்துவது குறித்து கூடுதல் அவதானம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மலேரியா நோய் சுமார் 10 ஆயிரம் வருடங்கள் வரலாற்றைக் கொண்டது. 1937 ஆம் ஆண்டில் மாத்திரம் 82 ஆயிரம் பேர் மலேரியாவினால் இறந்ததுடன் 15 இலட்சம் பேர் இந்நோய் தாக்கத்துக்கு உள்ளாகினர். இந்நோய்த்தாக்கம் காரணமாக அநுராதபுரத்தில் குடும்பம் குடும்பமாக மக்கள் உயிரிழந்துள்ளனர்.

பின்னர் இந்நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும் 1960 இல் இந்நோய் மீண்டும் தலைதூக்கியது. 1970 ஆம் ஆண்டில் இந்நோய் நாட்டின் அநேக பிரதேசங்களில் பரவியது. 2 ஆயிரமாம் ஆண்டளவில் இரண்டு இலட்சம் பேர் மலேரியா நோய் தாக்கத்துக்குள்ளாகினர். கடந்த வருடம் (2012 இல்) நாடு முழுவதும் 23 பேர் மாத்திரமே மலேரியா தாக்கத்திற்குள்ளாகியிருந்த போதும் வெளியிலிருந்து இலங்கை வந்த 70 பேர் இதற்கான நோய்க்காவிகளாக செயற்பட்டமையினால் மலேரியா நோய்த் தாக்கத்திற்கு உள்ளானோரின் எண்ணிக்கை 93 ஆக இருந்தது.

இலங்கையில் மலேரியா நோயினை இல்லாமல் ஒழித்த போதிலும் வெளிநாட்டிலிருந்து வருபவர்களிடமிருந்து இந்நோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே மலேரியாவை ஒழிக்கும் வேலைத் திட்டத்திற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமெனவும் அமைச்சர் கூறினார்.

# பிரதேசசபை உறுப்பினர் ஐ.தே.க.வில் இணைவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் விஜயரட்ணம் எட்வின் டானியல் ஐ.தேக. உறுப்பினராக நியமனம் பெற்றுக் கொண்டார்.

யாழ். கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடையே சந்திப்பு இடம்பெற்றது.

அச்சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் - ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக ரணில் விக்கிரம சிங்க முன்னிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தின் 10 தேர்தல் தொகுதிக்குமான அமைப்பாளர்கள் தெரிவும் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் டி.எம். சுவாமிநாதன் உட்பட கட்சியின் அமைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொணடனர். (25)


# இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலாஜோதி விளையாட்டு கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் செல்வபுரம் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் இப் போட்டியில் மோத உள்ளன.

ந.சசிகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர் மா.இளம்பிறை பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்றார். (120)




வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் வருடாந்த மஹோற்சவத்தின் நேற்றைய பூங்காவன உற்சவத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அன்னக்கப்பலில் அம்பாள் வீதியுலா வருவதைக் காணலாம். (படம் : சா.சாதனா)

## படையினர் வசம்...

தற்போது ஒரு அமைதிச் சூழல் உருவாகியுள்ள இன்றைய நிலையில் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதிலும் சுயலாப அரசியல் வாதிகள் உரிமை உரிமை என்று கூறிக் கொண்டு இருக்கின்றதை அழிக்கும் அரசியலில் ஈடுபட்டு வரும் அதேவேளை, நாம் இருக்கின்றதை பாதுகாத்துக் கொண்டு அதிலிருந்து மேலும் அபிவிருத்தி ஆக்கங்களை முன்னெடுக்கும் வகையில் உரிமைகளையும் வென்றெடுப்பதற்காகவும் எமது அரசியலை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நிலையில் மக்கள் உண்மை நிலையை அறிந்து அபிவிருத்திக்கும், மக்கள் பணி செய்பவர்களுக்கும் தமது ஒன்றிணைந்த ஆதரவை வழங்கும் பட்சத்தில் நாம் எதிர்காலத்திலும் பல்வேறு அபிவிருத்தி மேம்பாட்டு செயற்திட்டங்களை முன்னெடுப்போம்.

இதனிடையே சமாச மேம்பாட்டிற்காக விசேட நிதி வழங்கப்படுவது தொடர்பாகவும், சமாசத்தினது எதிர்கால திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

அத்துடன் சமாசத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் தேவைகளை இனங்கண்டு அவற்றை முன்னுரிமையடிப்படையில் விசேட நிதியினூடாக நிறைவேற்றுவது தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் அதற்கென 13 அங்கத்தவர்களைக் கொண்டதான குழுவொன்றையும் அமைத்தார்.

சமாசத்திற்கென ஐந்து கணனித் தொகுதிகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் க்ட்டப்பிராய் சங்கத்திற்கான கள் விற்பனை நிலையத்தை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், யாழ்.கிளைச் சங்கத்திற்கான கள்விற்பனை நிலையத்தை புதிய இடத்தில் அமைப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், சமாசத்தால் முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் அவர்கள் துறைசார்ந்தோரிடம் கலந்துரையாடினார்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கணேசன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

## கொமன்வெல்த்...

அடிப்படையில் சட்டத்தின் மாட்சிமை, ஜனநாயகம், நல்லாட்சி போன்ற விழுமியங்கள் சார்ந்த ஒரு கட்டமைப்பு என்று பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்ட கனேடிய அமைச்சர், இந்த விழுமியங்கள் அனைத்திலுமே இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று தெரி வித்தார்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் போர்க்குற்றங்கள் நடந்தன என்பதற்கான வலுவான ஆதாரங்களும் மற்றும் அதிக ரித்துவரும் தடயங்களும் கிடைத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## தமிழ்மக்களின்....

ஆயுதப் போராட்டமும் வன்முறையும் தந்தை செல்வா அவர்கள் 1977ஆம் ஆண்டு மறைந்த பிறகு தான் ஆரம்பமானது. 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றது.

அவ் விதமாக ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த காரணத்தின் நிமித்தம் மீண்டும் பேச்சுவார்த் தையின் மூலமாக சமாதானமாக வன்முறை இல்லாமல் ஒரு தீர்வைக் காணுவதற்கு ஒரு சந்தர்ப்பம் உருவாகியிருக்கின்றது.

ஒருமித்த பிரிக்கப்படாத ஒற்றுமையான இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு நாங்கள் பிரேரணை முன்வைத்திருக்கிறோம். நாங்கள் எழுத்து மூலமாக முன்வைத்த பிரேரணைகளுக்கு அரசாங்கம் தங்களுடைய பதிலைத் தருவோம் என்று 2011ஆம் ஆண்டு பங்குனி மாதம் வாக்குறுதியளித்த போதிலும் இன்றைக்கு இரண்டு வருட்ங்கள் கழித்தும் கூட அவர்களுடைய பதில் இன்னமும் வரவில்லை.

இன்றைக்கு இந்த நாட்டில் தமிழ் மக்களுடைய சரித்திரத்தை மாற்றியமைப்பதற்கும் மாற்றி எழுதுவதற்கும் பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடமாகாண...

ளனர். மக்களின் உரிமைகளையும் காணிகளையும் அபகரிக்கும் வேலையில் அரசாங்கம் இறங்கியிருப்பதாகவும் அவர் கள் சுட்டிக் காட்டினர்.

தேசிய பாதுகாப்பை போலவே நாட்டு மக்களின் வாழ்க்கையையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்று வவுனியாவில் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுமா இல் லையா என்பது கடவுளுக்குத் தான் தெரியும் என்றும் ரணில் தெரிவித்தார்.

இதேவேளை பொது மக்களின் காணிகள் அபகரிக் கப்படுகின்ற வலிகாமம் பகு திக்கு நாங்கள் சென்ற போது, எங்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி உள்ளே செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். ஆனால் எங்களுடன் வந்த உல்லாசப் பயணிகள், எந்தவிதமான தடைகளுமின்றி அந்தப் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்குச் சென்று அறை யெடுத்துத் தங்கினார்கள். அவர்களை எவரும் தடுக்க வுமில்லை. இவ்வாறு அங்குள் ளவர்கள் கோமாளித்தனமாக நடந்து கொள்கின்றார்கள் என்று பி.பி.சி.யிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வெறும் 250 ஏக்கர் பரப்புக் காணியைக் கொண்டிருந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்காக, எந்த விதக் காரணமும் இல்லாமல் 3500 ஏக்கர் காணி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருப்பதாக கருணாநாயக்க கூறினார்.

அதேபோல, எவ்வித காரணமும் இல்லாமல் வலிகாமம் பிரதேசத்தில் 6 ஆயிரத்து 400 ஏக்கர் பரப்புள்ள மக்கள் காணிகளையும் அரசாங்கம் அபகரித்துள்ளதாக வும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி குழுவினர் நான்கு நாள் பயணமாக வடபகுதிக்கு விஜ யம் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு கிளிநொச்சி சென்ற ரணில் குழுவினர் நேற்று பிற்பகல் வவுனியா சென்று கட்சி உறுப்பினர்களை சந்தித் துப் பேசியுள்ளனர். இன்று மன்னாருக்குச் செல்லவுள்ளனர்.

## பொதுநலவாய...

பிரதமர் மெல்கம் ப்ரேசர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாகவும் இதனால் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை அவுஸ்ரேலியா புறக்கணிக்க வேண்டுமென அவர் கோரியி ருந்தார்.

எனினும், திட்டமிட்டவாறு அமர்வுகளில் பங்கேற்கப் போவதாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குற்றச் செயல்கள் இடம்பெற்றமைக் கான எவ்வித ஆதாரங்களும் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமர்வுகளை புறக்கணிப் பது பாதகமான விளைவுகளை அதிகம் ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த வேண்டு மென தொடர்ந்தும் அழுத் தங்களை பிரயோகிப்பதே எமது கடமையாக அமைய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். அனைத்து நாடுகளும் இந்த மாநாட்டில் பங்கேற்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## காணி கொள்வனவிற்காக...

கற்பிக்க வேண்டு மென்ற குறிக்கோளுடன் பெற் றோர் இந்தக் கட்டண அதிகரிப்பை ஒருவாறு செலுத்தி வரும் நிலையில், மாதாந்தக் கட்டணத்தை விடவும் பணம் சம்பாதித்து வருகின்றன.

குறிப்பாக வினாவிடை வகுப்பு, குறிப்புகள், விழாக்கள் எனவும் மாணவரிடம் பண அறவீடு இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையிலேயே தனியார் கல்வி நிலையமொன்று காணிக் கொள்வனவிற்காக மாணவர்க ளிடமிருந்து மேலதிகமாக ஒரு தொகைப் பணத்தை மாதாந்தம் அறிவிட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே கட்டண அதிக ரிப்பு மற்றும் பிற அறவீடென வசூலிக்கும் குறித்த கல்வி நிறுவனம் சொந்தத் தேவைக்கெனக் காணிக்கொள்வனவிற்காக மாணவர்களிடம் மாதாந்தம் பணம் அறவிடுவது எவ்வகையில் நியாயமாகுமெனவும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே இந்த விடயம் குறித்து கல்வி அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுத்து உரிய தீர்வினைப் பெற்றுத்தர வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (42)

# அனுமதி, முன்னறிவித்தல் பெறாததால்
# ரணில் குழு மாவிட்டபுரத்தில் தடுப்பு
## – இராணுவத் தலைமையகம் விளக்கம்

(கொழும்பு)

இராணுவ முகாம்களோ பொலிஸ் நிலையங்களோ பொதுமக்களின் காட்சிக் கூடங்கள் அல்ல. எவ்விதமான முன் அறிவித்தலோ அனுமதியோ பெற்றுக்கொள்ளாமையினாலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் வலிகாமம் வடக்கு மாவிட்டபுரம் நுழைவாயிலில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர் என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய கூறுகையில்,

கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். இவர்கள் பலாலி விமான நிலையம் ஊடாகவே யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினருக்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படவில்லை. ஏனென்றால் அது பொதுமக்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இக்குழுவினர் மாவிட்டபுரம் முகாமிற்கு அருகில தமது வாகனத் தொடரணியை நிறுத்தி முகாமிற்குள் செல்ல முற்பட்டுள்ளனர். இதற்கு கடமையிலிருந்த இராணுவ அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஏனெனில் இராணுவ முகாமிற்குள அனுமதியின்றிச் செல்ல முடியாது என்பதால் இதன் போது அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் எதிர்க்கட்சிக் குழுவினர் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

உலகத்தில் எந்தவொரு நாட்டிலுமே அனுமதியின்றி இராணுவ முகாமிற்குள் செல்ல முடியாது. ஏனெனில் இராணுவ முகாமோ பொலிஸ் நிலையமோ பொதுமக்களின் காட்சி கூடங்கள் அல்ல என்று கூறினார்.

# தாய்நாட்டை முன்னிலைப்படுத்தி இலங்கையராக இருக்க வேண்டும்
## சட்டத்தரணிகள் சங்க ஒன்று கூடலில் ஜனாதிபதி



(கொழும்பு)

நாம் எப்போதும் இனம், மதம், கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தாது தாய்நாட்டை முன்னிலைப்படுத்தி இலங்கையராக இருக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒன்றுகூடலில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

எந்த தருணத்திலும் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாமல் பாதுகாப்பது நாட்டை நேசிக்கும் அனைவரதும் கடமை.

30 வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாடு அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது நாட்டு மக்களின் நலனுக்காக, அபிவிருத்திக்காக பல திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இனவாதம், மதவாதத்தை தூண்டி அரசியல் ரீதியில் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை சீர்குலைக்க நாட்டுக்குள் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இது குறித்து அனைவரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# மும்பையிடம் வீழ்ந்தது பெங்களூர் றோயல்ஸ்

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 37 ஆவது ஐ.பி.எல் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை 58 ஓட்டங்களால் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ்.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் ஆரம்ப வீரர்களான சிமித், சச்சின் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். இதில் சச்சின் (23) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிமித்துடன் கார்த்திக் இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்புற விளையாடியதால் அணியின ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. இதில் சிமித் (50) ஓட்டத்துடன் ஆட்டமிழக்க ரோகித் சர்மா இணைந்தார்.

எனினும் அவரும் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த போலார்ட் வான வேடிக்கை காட்டினார். இதில் சிறப்பாக விளையாடிய கார்த்திக் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் போலாட் 16 பந்தில் 34, ஹர் பஜன் 16 என மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் ஆர்.பி.சிங் மற்றும் சையத் மொகமட் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். பலமிக்க துடுப்பு வரிசையைக் கொண்ட பெங்களூர் றோயல் இலகுவாக மும்பையை வீழ்த்துமென எதிர்பார்த்தபோதிலும், மும்பை பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சால் வெற்றிக்கனவு சாத்தியமாகவில்லை.

இறுதியில் பெங்களூர் றோயல 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியைத் தழுவியது.

இதில் டில்ஷான் 13, கெயில் 18, ஹோலி 1 டிவில்லியரீஸ் 2, திவாரி 21 ஆட்டமிழக்காமல் ராம்பவுல் 23, வினய்குமார் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் குல்கர்னி 3, ஹர்பஜன், சிமித் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சிமித் தெரிவானார்.

# நவலோகாவிலிருந்து வெளியேறினார் துமிந்த

கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, நேற்றைய தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

இவ்வாறு வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய அவர், முதன் முதலாக அலரி மாளிகைக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முற்பகல் 11.25 மணிக்கு இருந்த நல்ல நேரத்தில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய துமிந்த சில்வாவை வரவேற்பதற்காக சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் நவலோகா வைத்தியசாலையில் மலர் மாலைகளுடன் கூடி நின்று பட்டாசு



கொளுத்திவரவேற்றனர்.

பலத்த பொலிஸ் மற்றும் பிரத்தியேக பாதுகாப்புக்கு மத்தியில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய துமிந்த, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆசிர்வாதம் பெறுவதற்காக அலரி மாளிகைக்கு புறப்பட்டுச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தனது உடல் நிலை தனக்கு ஒரு பிரச்சினை இல்லை என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, கொலன்னாவை ஆசனத்தை பொறுப்பேற்று தனது அரசியல் பயணத்தை மீண்டும் தொடங்கப் போவதாகத் தெரிவித்தார்.

# முன்னாள் போராளிகளிடம் பண மோசடி; வசமாக மாட்டினார் ஏமாற்றிய நபர்

(யாழ்ப்பாணம்)

பொது மக்கள் மற்றும் முன்னாள் போராளிகளாக இருந்து புனர்வாழ்வு பெற்றவர்களையும் அணுகி வேலை பெற்றுத்தருவதாகவும், வாகனங்களை வட்டியில்லாக் கடனுக்கு பெற்றுத் தருவதாகவும் கூறி பலரிடம் மோசடி செய்து வந்த நபர் ஒருவர் பாதிக்கப்பட்டவர்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தாவடிப் பகுதயில் இவ்வாறு ஏமாற்றி புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் போராளிகள் மற்றும் பொது மக்களிடம் வேலை பெற்றுத் தருவதாகவும், வாகனம் பெற்றுத் தருவதாகவும் கூறியதுடன் முப்பதாயிரம் ரூபா முதல் ஐம்பதாயிரம் ரூபா வரையில் வங்கி இலக்கம் ஒன்றைக்கொடுத்து வங்கியில் பணத்தை வைப்பிடுங்கள் எனக்கூறி பணத்தை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

நேற்று முன்தினம் பகல் குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் பகுதியில் நிற்பதைக் கண்ட பாதிக்கப்பட்ட இளைஞர்கள் குறித்த இளைஞரை பிடித்து கிராம அலுவலரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞரிடம் இருந்து பல கையடக்கத் தொலைபேசிகள், சிம்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# உதயன் மீதான தாக்குதல் ரணிலின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

உதயன் பத்திரிகை அலுவலகத்தை தாக்கியது இராணுவமே என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதை யாழ். மாவட்ட இராணுவத் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நிராகரித்துள்ளார்.

பயங்கரவாதிகளுடன் போரிட்டு பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வட பகுதி மக்கள் வாழ்ந்த போது அங்கு மக்கள் பட்ட கஷ்டங்களை அறியாத ரணில் மக்களுக்காக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் இராணுவம் மீது வீண் பழி சுமத்துவது கவலையளிக்கிறது.

அவர் இப்படிக் கூறியிருக்கக் கூடாது. உதயன் பத்திரிகை தீப்பிடித்த சம்பவத்தை இன்று சிலர் அரசியலாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அலுவலகத்தைத் தாக்க வேண்டிய தேவை இராணுவத்துக்கு இல்லை. இராணுவத்தின் பிரசன்னத்தை வெகுவாகக் குறைத்திருக்கிறோம்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை செய்து வருகின்றனர். விரைவில் உண்மை நிலை புலப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலதிக செலவை ஏற்படுத்தும் மின் கட்டணம் மீதான அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் மாதாந்தம் 42 மில்லியன் ரூபாவை மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளதாக, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை தெரிவித்துள்ளது.

சபை தற்போது சுமார் 300 மில்லியன் ரூபாவை மாதாந்தம் இலங்கை மின்சாரசபைக்கு செலுத்துகிறது.

எவ்வாறாயினும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மின்சாரக் கட்டணத்திருத்தத்தால உற்பத்திச் செலவுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டிஆரச்சி கூறியுள்ளார்.

இதற்கமைய சுமார் 42 மில்லியன் ரூபாவை மேலதிகமாக செலவிடுவதற்கு நேரிடும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலதிக செலவை ஈடு செய்வதற்காக நீர் விநியோகக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான இணக்கம் இல்லை எனவும் சபை அறிவித்துள்ளது.

வளங்களை சிக்கனமாக பயன்படுத்தியும் செயற்திறன் மிக்கதான நடவடிக்கைகளை மேற்கொண்டும் மேலதிக செலவை ஈடுசெய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# ஊழியருக்கு சம்பளம் வழங்க கடன் பெற்றுள்ளது அரசு
## தொழிலாளர் ஒன்றியம் குற்றச்சாட்டு

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் வகையில் அரசாங்கம் கடன் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 17 வீதவட்டி அடிப்படையில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிடமிருந்து அரசாங்கம் 410 பில்லியன் ரூபா கடன் பெற்றுக்கொண்டுள்ளதாக அனைத்து நிறுவன தொழிலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மிகக் கூடுதலான வட்டி வீதத்தை செலுத்தியே இந்தக் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. அரசாங்க வங்கிகளிடமிருந்து பாரியளவு கடன் பெற்றுக் கொள்வதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வங்கிகளிடமிருந்து அரசாங்கம் மொத்தமாக ஒரு ட்ரில்லியன் ரூபாவினை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது. பாரியளவில் கடன் பெற்றுக்கொள்வதானது பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.